Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 22 (21.08.2003) வியாழக்கிழமை இதழ்: 321

## தமிழீழ மீட்பு நிதிக் கடன்; 1500 பேருக்கு மீளளிப்பு!

### நிதித்துறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்புநிதிக் கடன் வழங்கியவர்களில், ஆயிரத்து 500 பேருக்கு, இவ்வருடம் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

இந்தக் கடன் மீளளிப்பு, அடுத்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக, தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

குலுக்கல்முறை மூலமே இந்த ஆயிரத்து 500 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர், விவரங்கள் நாளைய நமது ஈழநாட்டில் வெளிவரும்.

## குமார் படுகொலைச் சந்தேகநபர் இனந்தெரியாதோர் சூட்டுக்கு பலி!

### நீதிமன்றிலிருந்து சிறைக்கு கொண்டு செல்கையில் சம்பவம்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் முன்னாள் தலைவர் குமார் பொன்னம்பலம் மற்றும் தென்மாகாண அமைச்சர் எம்.கே.ரஞ்சித் ஆகியோரின் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரான சுனில் ரட்ணவீர, இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் காயமடைந்தனர்.

எம்பிலிப்பிட்டிய நீதிமன்றிலிருந்து தங்காலை சிறைச்சாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் அங்குனுகொல பெலஸ் என்ற இடத்தில் நடைபெற்றது.

தென்மாகாண சபையின் அமைச்சரான எம்.கே.ரஞ்சித் மற்றும் குமார் பொன்னம்பலம் ஆகியோர் படுகொலை உட்பட இருபது கொலைகள் மற்றும் கொள்ளைகளுடன் இவர் தொடர்புடையவரென்றும், நேற்று - எம்பிலிப்பிட்டிய நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு, மீள அழைத்து வரப்படுகையிலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

காயமடைந்த இருவரில் ஒருவர் பொலிஸ் கொன்ஸ்டபிள் மற்றவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை தனித்தனியாக பிரிக்க ஜனாதிபதி சந்திரிகா தீவிர ஆலோசனை!

### அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் அறிவிப்பு



(கொழும்பு)

**இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்து, தனித்தனி நிர்வாகங்களின்கீழ் கொண்டு வருவது குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரமாக ஆலோசித்து வருவதாக, அவரது ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்**

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக, பல்வேறு தரப்புக்களும் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளன. கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள், சமாதான நடவடிக்கைகளுக்கு முக்கிய தடையாக இருக்கும்.

இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவது பயனற்றது.

தற்போது தடைப்பட்டுள்ள சமாதான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவல்லுநர்கள் மாநாடு பாரிஸில் இன்று ஆரம்பம்!

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் தொடர்பாக ஆராயும் சட்ட வல்லுநர் மாநாடு - இன்று பிரான்ஸில் ஆரம்பமாகவுள்ளது.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் தீவிரமாக ஆராயப்படவுள்ளன.

வன்னியிலிருந்து நேற்றுமுன்தினம், பாரிஸ் சென்ற விடுதலைப் புலிகளுடன் - மலேசியா, சிங்கப்பூர் அவுஸ்திரேலியா,ஐரோப்பிய நாடுகளிலுள்ள சட்டவல்லுநர்களும் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## படக்காட்சியை நிறுத்துமாறு கோரிய கண்காணிப்புக் குழுவுடன் மக்கள் கடும் வாக்குவாதம்!

நல்லூரில், விடுதலைப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் படக்காட்சி நேற்றுமுன்தினம் காண்பிக்கப்பட்டபோது, அதனைப் போர் நிறுத்த மீறல் எனத் தெரிவித்த கண்காணிப்புக்குழுவினர், படக்காட்சியை நிறுத்துமாறு கோரினர்.

இதனால், படக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள், ஆத்திரமடைந்து, இது யுத்தநிறுத்த மீறல் அல்ல எனக் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, கண்காணிப்புக் குழுவினர் தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினர். தொடர்ந்து படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

### விண்ணாணம் விநாசியர்



நாட்டைப் பிரிக்கிறதுக்கு அம்மா வழிகோலுறா போல....!

## நோர்வே பிரதித் தூதர் பாரிஸ் பயணமானார்!

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, பிரான்ஸில் இன்று ஆரம்பமாகவுள்ள விடுதலைப் புலிகளின் மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, நோர்வேயின் துணைத் தூதுவர் தோமஸ் பிறாங்லண்ட், நேற்று அங்கு சென்றுள்ளார்.

நேற்று மாலை 2 மணிக்கு, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விசேட விமானம் மூலம் அவர் பிரான்ஸுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்கள் பத்து நாட்கள் பாரிஸில் தங்கியிருந்து பேச்சுக்களை நடத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே, அவர் அங்கு சென்றுள்ளதாக நோர்வே தூதரகம் தெரிவித்தது.

(01)

## முகமாலையில் போராளி கைது: அப்பட்டமான யுத்தநிறுத்தமீறல்!

### கண்காணிப்புக்குழுவிடம் இளம்பரிதி முறையீடு

முகமாலை சோதனைச் சாவடியில் - விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும், மூன்று பணியாளர்களும் கைதுசெய்யப்பட்டமை அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், முகமாலைச் சோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவதற்காக நேற்று யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பின்போதே அவா இவ்வாறு தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் கிருபாகரன், அரியகுமார் சாந்தகுமார் ஆகிய இருவரும், சமையல் பணிக்காக, கிளிநொச்சிக்கு நேற்றுக் முன்தினம் காலை 7.30 மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இருவரையும் சமையல் பணியா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்களுக்கு உதவிகளைச் செய்ய அவுஸ்திரேலிய அரசு தயாராகவுள்ளது

### யாழ். வந்த பிரதித் தூதுவர் கேற்லோகன்



தமிழ்மக்களுக்கு பல்வேறுபட்ட உதவிகள் புரிவதற்கு அவுஸ்திரே லிய அரசு தயாராகவுள்ளதென, அந்நாட்டின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் கேற் லோகன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ். செயலகத்தில், அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், மீண்டும் ஒருமுறை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும்போது, யாழ். பொதுநூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது - உயர் பாதுகாப்பு வலய விவகாரங்கள், மீள் குடியமர்வு, மீனவர்களின் பொருளாதார ரீதியான பிரச்சினைகளெனப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

கடல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும், யாழ். மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் பற்றிய நிலைவரங்களையும் அவர் கேட்டறிந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# கிளிநொச்சியில் குழாய்கிணறு அமைக்க அனுமதிக்க வேண்டாம்

## அரச அதிபர் இராசநாயகம் உத்தரவு

கிளிநொச்சி மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவதால், நிலத்தடி நீர் விரைவில் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதனால், குழாய் கிணறு அமைப்பதை உடன் தடைசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு - கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் மாவட்ட சுற்றாடல் குழு கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

குழாய்க்கிணறுகள் அமைப்பதன் காரணமாக மாவட்டத்திலுள்ள குடிநீர்நிலைகள், உவர்நீராக மாறும் அபாயகரமான நிலை ஏற்படவாய்ப்பு ஏற்பட்டுள்ளதெனவும், இதனால், கிளிநொச்சி மாவட்டத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கு அத்தியவசியத் தேவையிருப்பினும், அனுமதி வழங்க கூடாதெனப் பிரதேச செயலகங்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

# மட்டுவில் வடக்குப் பிரதேசத்தில் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன

மட்டுவில் வடக்கு - முசிறிப் பகுதி, மட்டுவில் சிவன் கோவிலடியை அண்டியுள்ள பகுதிகளில், தற்போது மிதிவெடிகளை அகற்றும் பணி நடைபெறுகிறது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது, இந்தப் பகுதிகளில் பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

வெடிக்காத நிலையில் ஏறிகணைகளும், கணிவெடிகளும், இந்தப் பகுதியில் காணப்படுகின்றன.

'ஹலோ ட்ரஸ்ட்' கண்ணி வெடியகற்றும் நிறுவனம், கடந்த வாரம் முதல் இந்தப் பகுதியில் கண்ணி வெடியகற்றும் பணியை மேற்கொண்டுவருகிறது.

## படகுகளுக்கான

# மோட்டார் இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடு நீக்கப்பட்டது

(கொழும்பு)

படகுகளுக்கான மோட்டார் இயந்திரங்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை, அரசாங்கம் முழுமையாக நீக்கியுள்ளது. மீன்பிடித்துறை மற்றும் உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே, அரசாங்கம் படகு இயந்திர இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முற்றாக நீக்கியுள்ளதாக, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மோட்டார் இயந்திர இறக்குமதி மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதையடுத்து, எவரும் தமது விருப்பத்தின் பெயரில் படகு, மோட்டார் இயந்திரங்களை இறக்குமதி செய்யமுடியுமென ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் ஆர்.சமரவீர தெரிவித்துள்ளார். இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கும் பொருட்டு ஜுன் இருபத்தைந்தாம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீன்களின் ஏற்றுமதிகள் மூலமாக 13,200 மில்லியன் ரூபா வருமானம்

கடந்த ஒன்றரை வருடகாலத்தில் - 22 ஆயிரத்து 853 தொன் மீன்களை ஏற்றுமதி செய்து, 13 ஆயிரத்து 220 மில்லியன் ரூபாவை இலங்கை வருமானமாகப் பெற்றுள்ளது என, மீன்பிடி மற்றும் கடல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 14 ஆயிரத்து 172 தொன் மீன்கள் - 2002 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்டு, வருமானமாக 8 ஆயிரத்து 47 மில்லியன் ரூபாவும், இவ்வருடம் முதல் ஆறுமாத காலத்தில், 8 ஆயிரத்து 681 தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, 5 ஆயிரத்து 173 மில்லியன் ரூபா வருமானமாகவும் பெறப்பட்டுள்ளது.

இவ்வருடம் - முதல் ஆறு மாத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீன் ஏற்றுமதி - கடந்த வருடம் இதே காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீன் ஏற்றுமதியைவிட, 53 சதவீதம் அதிகரித்துள்ளதுடன், இவ்வருட முதல் ஆறு மாதகால மீன் ஏற்றுமதி வருமானம் - கடந்த வருடம் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது, 74 சதவீத அதிகரிப்பையும் காட்டுகிறது.

இலங்கையின் மீன் வகைகளை ஏற்றுமதித் தரத்துக்கு ஏற்ப தயார் செய்யும் வகையில், கூவின் உதவி பெறப்பட்டது.

இலங்கையின் ருனா ரக மீன்கள் ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கும், வளர்ப்பு மீன்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கும், நண்டுகள் ஹொங்கொங், சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கும், சுறா மீன் துடுப்பு ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூருக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையின் மீன் ஏற்றுமதியை முற்றிலும் தனியார் துறையினரே கையாளுகின்றனர். இவர்கள் முதலீட்டுச் சபையின் கீழ் செயற்படுவதால், ஏனைய ஏற்றுமதித் துறைகளுக்கு உள்ள சலுகைகள், இவர்களுக்கும் கிடைக்கின்றன. இதனால், இலங்கையின் மீன் ஏற்றுமதித் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடியில் புலமையாளர் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் - புலமையாளர்கள், அறிஞர்கள், கூட்டுறவாளர்கள், மாணவர்களுக்கான கௌரவிப்பும் பட்டமளிப்பு விழாவும் மூன்று தினங்கள் நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் நடத்தும் இந்த நிகழ்வு, இன்றுமுதல் மூன்றுதினங்கள் காலை 9.30 மணிக்கு, நெல்லியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில், இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் மூன்றுநாள் நிகழ்வில் - புலமையாளர் அறிமுகமும், பரிசில்கள் வழங்கலும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை வடமராட்சி அரசியல்துறைக் கோட்டப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, வரவேற்புரையைக் கலாசார கூட்டுறவுப் பெருமன்ற அமைப்பாளர் செ.சதானந்தன் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# ஆசிரியர் செயலமர்வு!

தீவகக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள - ஆசிரிய நிலையத்தினால், நாளையும், நாளைமறுதினமும் நுண்முறைக் கற்பித்தல் தொடர்பான செயலமர்வொன்று, காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் - நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த - பாடசாலைகளில், தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையான வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக நடாத்தப்படுகிறது.

எனவே, இந்த ஆசிரியர்கள் தவறாது, இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு தீவகக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபால் கேட்டுள்ளார்.

# திருடப்பட்ட சைக்கிள்கள் வீடொன்றிலிருந்து மீட்பு!

(யாழ்ப்பாணம்)

களவாடப்பட்ட ஐந்து துவிச்சக்கர வண்டிகளை, பொலிஸார் வண்ணார்பண்ணையிலுள்ள வீடொன்றில் இருந்து மீட்டுள்ளனர். இந்த ஐந்து சைக்கிள்களையும் களவாடியதாகச் சந்தேகிக்கப்படும் நபரை - பொலிஸார் யாழ்.நீதிமன்றில் கடந்த 18 ஆம் திகதி ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

தற்போது, இந்த ஐந்து சைக்கிள்களும், யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உடுபுடைவைகளைத் திருடிய இளைஞருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவரின் வீட்டிலிருந்து, உடுபுடைவைகளைக் களவாடியதாகச் சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர், பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர்- ஜேர்மனியிலிருந்து வந்தது அரியாலையில் தங்கியிருந்தவர்களின் வீட்டிலேயே, மேற்படி இளைஞன் 10 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான உடுபுடைவைகளைக் களவாடியதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, இந்த இளைஞனைப் பிடித்து பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். வழக்கினை விசாரித்த நீதிவான், மேற்படி இளைஞனை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உததரவிட்டுள்ளார்.

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு நடாத்தும்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | ரூபா 3,000 |
| இரண்டாம் பரிசு | - | ரூபா 2,000 |
| மூன்றாவது பரிசு | - | ரூபா 1,000 |

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | ரூபா 3,000 |
| இரண்டாம் பரிசு | - | ரூபா 2,000 |
| மூன்றாவது பரிசு | - | ரூபா 1,000 |

### நிபந்தனைகள்

- ✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- ✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**போட்டி முடிவுதிகதி - 10.09.2003**

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினவெளியீடு

விஜயகாந், கிரண் நடித்த

**தென்னவன்**



காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30

(சீ-1284)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், கிரண் நடித்த

**பரசுராம்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**BLUE STREAK**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சீ-1285)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

# சிறுகதை; கவிதைப் போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| சிறுகதை - | முதலாம் பரிசு | - | 6,000 ரூபா |
| | இரண்டாம் பரிசு | - | 4,000 ரூபா |
| | மூன்றாவது பரிசு | - | 2,000 ரூபா |
| கவிதை - | முதலாம் பரிசு | - | 6,000 ரூபா |
| | இரண்டாம் பரிசு | - | 4,000 ரூபா |
| | மூன்றாவது பரிசு | - | 2,000 ரூபா |

### நிபந்தனைகள்

- ✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- ✧ மொழிபெயர்ப்புக் கதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- ✧ கதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ✧ கதைகள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- ✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- ✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

### கிழக்கு பிராந்தியத் தளபதியாக

# மல்லவராச்சி நியமனம் படைத்தரப்பில் அதிருப்தி!

(கொழும்பு)

தனியார் பாதுகாப்புச் சேவைக்கு இராணுவச் சிப்பாயைக் கடமைபுரிய அனுமதித்த, மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சிக்கு - கிழக்குப் பிராந்திய கட்டளையிடும் அதிகாரியாகப் பதவி உயர்வு வழங்கியதற்கு, இராணுவத்தினர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக 'சிலுமின' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

மல்லவராச்சியின் மனைவி பெயரில் நடத்தப்படும் தனியார் பாதுகாப்புப் பிரிவிலேயே, இந்தச் சிப்பாய் பாதுகாப்பு அதிகாரியாகப் பதவி வகித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சிக்கு, இராணுவச் சட்டத்தின்படியா அல்லது சாதாரண சட்டத்தின்படியா குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று, எதையும் கவனிக்காது பதவி உயர்வு வழங்கியமை - இராணுவ சிப்பாய்களின் மத்தியிலும், கனிஷ்ட தர உத்தியோகத்தர்கள் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்குப் பிராந்திய கட்டளையிடும் அதிகாரியின் கீழ் - திருகோணமலையில் உள்ள 22 ஆவது படைப்பிரிவும், மின்னேரியாவில் உள்ள 23 ஆவது படைப்பிரிவும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல் மல்லவராச்சி கடமைபுரிந்த, 42 ஆவது ரெஜிமென்டைச் சேர்ந்த, ஏ.வி.எஸ்.ஜயவிக்கிரம என்ற சிப்பாய் காணாமற்போனது சம்பந்தமாக, அவரது தந்தையார் முறையிட்டபோது - இராணுவ பொலிஸ், விசாரணையை ஆரம்பித்தது. அப்போது சம்பந்தப்பட்ட சிப்பாய் - மேஜர் ஜெனரல் மல்லவராச்சியின் மனைவியால் நடத்தப்படும் பாதுகாப்புச் சேவையில் கடமை புரிந்தது கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.




அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டத்துடன் இணைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள், தமது உரிமைகளை வலியுறுத்தி நடத்திய பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# சிறைச்சாலை திணைக்களத்தில் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைத் திணைக்களத்தில் - அதிகாரிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படாததால், சிறைச்சாலைத் திணைக்களம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு ஆணையாளர்கள் இளைப்பாறிச் சென்றதனாலும், மற்றும் 1500 வெற்றிடங்கள் சிறைச்சாலைத் திணைக்களத்தில் நிரப்பப்படாமல் இருப்பதனாலும் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

புதிதாக ஆணையாளர்களாக நியமிப்பதற்கு, சிறைச்சாலை திணைக்களத்தில் ஏற்ற உத்தியோகத்தர்கள் இல்லையென்றும், சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சிறைக்கைதிகளைப் பராமரிக்கும் பணியில் சிறைக்காவலர்களே கூடுதலாகக் கடமையாற்றுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முப்பது வருடகாலமாகச் சேவைபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள ஆணையாளர்களின் சேவை இல்லாததனால் - சிறைச்சாலைத் திணைக்களம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதென்று அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

### மட்டக்களப்பு வெபர் மைதானத்தில்

# செய்தியாளர் தடுக்கப்பட்டமைக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் மகஜர்

(கொழும்பு)

தமிழ் ஊடகவியலாளர் வேதநாயகம் இராணுவத்தினரால் இம்சைப் படுத்தப்பட்டது தொடர்பாக, தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் தா. வேதநாயகம், வெபர் மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு விழாவிற்கு செய்தி சேகரிக்க சென்ற போது, இராணுவத்தினரால் தடுக்கப்பட்டதுடன் அவரது அடையாள அட்டை, தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை என்பவற்றையும் வாங்கிச் சென்று, ஒரு மணி நேரத்திற்கு பின்பே அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது ஊடகவியலாளர்களின் உரிமையை மீறும் செயலாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இராணுவத்தினர் - பொதுமக்களையோ, ஊடகவியலாளர்களையோ சோதனை செய்ய முடியாது. பொலிஸாரே சோதனையிட முடியும். ஊடகவியலாளரின் அடையாள அட்டையைப் பறித்துச் சென்றதும், பொது மக்கள் கூடும் இடம் ஒன்றிக்குள் ஊடகவியலாளர்களைச் செல்லவிடாது தடுப்பதும், போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும்.

ஊடகவியலாளர்களின் உரிமையைப் பறித்து, அவர்களை இம்சைப்படுத்தும் இத்தகைய சம்பவங்கள் பற்றி விசாரித்து, நடவடிக்கைகள் எடுக்குமாறு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதன் பிரதிகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, இராணுவ - 233 ஆவது படைப்பிரிவு இணைப்பதிகாரி, எல்லை கடந்த ஊடகவியலாளர் சங்கம், ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசிங்கம், மாநகரசபை ஆணையாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## அரிசி உணவு நாடாளுமன்றத்தில் விற்பனை

அரிசியினால் ஆக்கப்படும் ஆகார வகைகள் நாடாளுமன்றம் மற்றும் அரச நிறுவனங்களில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

பாற்சோறு, சோறு, அரிசியினால் செய்யப்படும் ஆகார வகைகளே விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் நாடாளுமன்ற போசன சாலையிலும் அரிசியினால் ஆக்கப்படும் ஆகார வகைகளே விற்பதற்காக வைக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

### சம்மாந்துறையில்

# தமிழ் இளைஞர்களைத் தாக்கி பணம் கொள்ளையிடப்பட்டது!

(மட்டக்களப்பு)

சம்மாந்துறை ஆண்டிசந்தி என்னுமிடத்தில் வைத்து, மூதூரைச் சேர்ந்த தமிழ் விவசாயிகள் ஐந்துபேரை, இளைஞர் குழுவினர் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த 7000 ரூபா பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

பெருமாள் சுந்தரமூர்த்தி (வயது40), முத்துக்குமார் சின்னத்துரை (வயது32), முத்துக்குமார் விஜயன் (வயது23), செல்லத்துரை ஆயித்தியன் (வயது28), கந்தசாமி காத்தமுத்து (வயது24) ஆகியோர் இச்சம்பவத்தில் தாக்கப்பட்டவர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இவர்களும், இவர்களுடன் வந்த ஏனைய 20 பேரும் - தற்போது புலிகளின் பாதுகாப்பில் வீரமுனை சீந்தாத்துரை பிள்ளையார் ஆலயத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில் போன்ற பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில், முஸ்லிம் இளைஞர்களால் சந்திகளில் டயர்கள் போட்டு எரித்து, வீதித்தடைகளை எற்படுத்தி உள்ளனர். இதன் காரணமாக தமிழ் மக்கள் அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு பொலிஸ்மா அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

### மட்டக்களப்பு பிரதேசத்தில்

# கிராம அபிருத்தி சங்க தலைவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்!

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பற்று பிரதேசசபை தனது சொந்தக் கட்டடத்திற்கு மீண்டும் கொண்டு வரப்படவேண்டும் என்றும் - மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக செயல்படுவதுடன், வாடகைப்பணம் கொடுப்பதை உடன் நிறுத்தவேண்டுமெனவும் தெரிவித்த வந்தாறுமூலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ந.சம்புநாதன் இராணுவச் சி.ஐ.டி. பிரிவினரால் அண்மையில் விசாரிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விசாரணை தொடர்பாக தெரியவருவதாவது - தம்மை அழைத்த இராணுவ சி.ஐ.டி. பிரிவினர் பிரதேசசபை மாற்றப்படுவதற்கு யார் தூண்டு கோலாக இருக்கிறார்கள் என்றும், மற்றவர்களுடைய வழிநடத்தலில் செயற்பட வேண்டாமெனவும், இதனால் பின்விளைவு ஏற்பட வாய்ப்புண்டு எனவும், இவ்வாறு செயற்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் சி.ஐ.டியினர் எச்சரித்ததாக சம்புநாதன் தெரிவித்தார்.

### வட-கிழக்கு பாதுகாப்புக்கான சிங்கள அமைப்பு

# ஒரு லட்சம் கையெழுத்து திரட்டுவதற்கு நடவடிக்கை

வடக்கு - கிழக்கு பாதுகாப்புக்கான சிங்கள அமைப்பு, ஒரு லட்சம் கையெழுத்துப் பிரதிகளை 25 ஆம் திகதிக்கு பின்னர்- பிரதமர், ஜனாதிபதி, வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு கொடுக்கவுள்ளது.

படையினர் பாதுகாக்கப்பட வேண்டும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவில் இந்தியாவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும், இந்தியாவிலிருந்து இலங்கை உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, ஒரு லட்சம் கையெழுத்துக்களை மேற்படி அமைப்பு பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்திற்கென 3 பொலிஸ் அத்தியட்சகர்கள்

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று பொலிஸ் பிரதேசங்களின் பாதுகாப்பை கூட்டாக மேற்கொள்ளும் பொருட்டு, சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு, கல்முனை, மூதூர் ஆகிய பொலிஸ் பிரதேசங்களிலேயே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று பிரதேசங்களையும் சேர்ந்த பொதுமக்கள், பொலிஸார், முப்படையினர் ஆகியோர் பாதுகாப்புத் தொடர்பான செயற்பாடுகளை இணைந்து மேற்கொள்ளும் பொறுப்பு, இந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று பிரதேசங்களுக்கும் அண்மையில் விஜயம் செய்த பாதுகாப்பு தரப்பு உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார்.

இதன்படி கிழக்கு மாகாணத்திலிருந்து 550 பேர் பாதுகாப்பு பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏழு நிலையங்களில் இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

## மன்னார் மாவட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் - மனித உரிமைமீறல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு, எதிர்வரும் சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக, தலைமன்னார் கிராமத்திலிருந்து பேசாலை வரை, உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்து தலைமன்னாரிலுள்ள அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அப்பகுதி கிராம அலுவலர்களின் உதவியுடன், மன்னார் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் றதீஸ் இக்கருத்தரங்கினை ஒழுங்குசெய்துள்ளார்.

# பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு

# மட்டுவிலில் ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிப்பட்டறை

ஜி.ரி.இசற் - சர்வதேச சேவைகள் ஆசிய செயற்திட்டமும், யாழ். புனரமைப்புத் திட்டமும் இணைந்த செயற்பாட்டினூடாக அமுல்படுத்தப்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறை, கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் மட்டுவில் வடக்கு, சந்திர மௌலீச வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் - ஜி.ரி.இசற் நிறுவனப் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட, மேற்படி பயிற்சிப்பட்டறையில், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை ஆகிய 5 பாடசாலைகளினதும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில்- பாடசாலை அபிவிருத்திச் சங்க யாப்பு விளக்கப்பட்டதுடன், பாடசாலை அபிவிருத்தியில், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்பு, அப்பங்களிப்பில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவற்றை எவ்வாறு தீர்க்கலாம், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, சங்கம் எத்தகைய பங்களிப்பைச் செய்யலாம் போன்ற விடயங்கள் பற்றி, ஜி.ரி. இசற் நிறுவனப் பிரதிநிதிகளும், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் இணைந்து ஆராய்ந்து முடிவுகளை எடுத்தனர். (24)



உள்ளூராட்சி வார நிகழ்வையொட்டி நெடுந்தீவுப் பிரதேச சபையினர் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் ஜீவாகாரம் சத்துணவாக ஜீவாகாரம் வழங்கும் நிகழ்வை - வைபவரீதயாக பிரதேசசபை விசேட ஆணையாளர் ச.வா.தில்லைநாதன் வழங்குவதையும், அருகில் பொது சுகாதார பரிசோதகரையும் படத்தில் காணலாம்.

# "இடர்கள் கெடுக" அரங்க ஆற்றுகை

## இருமாதங்களில் 56 தடவை மேடையேற்றம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கும் செயற்திறன் அரங்க இயக்கத்தினர் - மிதிவெடிகள், வெடிபொருட்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு விழிப்புணர்வுச் செயற்பாட்டை கடந்த வருடத்திலிருந்து செயற்படுத்தி வருகின்றார்கள்.

இந்த ஆண்டு - இதன் தொடர்ச்சியாக இந்தச் செயற்பாடு நடைபெற்று வருகிறது. இந்தச் செயற்பாட்டிற்கு 'இடர்கள் கெடுக' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் - விரிவுரையாளரான தே.தேவானந்தின் நெறியாள்கை செயயப்பட்ட இந்த 'இடர்கள் கெடுக' என்ற நாடகம், மாணவர்கள் மகிழ்ந்து கற்கும் ஓர் செயற்பாடாக, கூடிப்பேசிக் கற்கும் ஓர் அரங்க நிகழ்வாகக் காணப்படுகின்றது.

இரண்டு மாதங்களுக்குள் 56 தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ள இந்த நாடகத்தின் மூலம், 8459 மாணவர்களுக்கும், 1000 இற்கு மேற்பட்ட மக்களுக்கும் மிதிவெடி பொருட்கள் தொடர்பான அறிவு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெடிபொருள் பாதிப்புக்குட்பட்ட காரைநகர் பிரதேச கிராம உத்தியோகத்தர்களின், மக்களின் வேண்டுகோளுக்கிணங்க- பாடசாலைகளிலும், கிராமங்களிலும், எதிர்வரும் வாரம் தொடர்ச்சியாக 20 ஆற்றுகைகள் நடைபெறவுள்ளது.

# கிளிநொச்சி வைத்தியசாலைகளில் பெருமளவு ஆளணிப்பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கி வரும் வைத்தியசாலைகளில ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் இதற்கு சுகாதார அமைச்சு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரியவருகிறது.

இம்மாவட்ட வைத்தியசாலையில் எழுபது வீத வைத்தியர்கள், ஐம்பது வீத பல்வைத்தியர்கள், அறுபத்தைந்து வீத உதவி மருத்துவர்கள், எழுபத்தைந்து வீத இரசாயன பரிசோதகர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

அத்துடன் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் எழுபத்தைந்து வீத சுகாதார வைத்திய அதிகாரிகளும், நாற்பது வீத பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் வெற்றிடம் நிலவி வருகிறதாக தெரியவருகிறது.

கிளிநொச்சி மாவட்ட வைத்திசாலை உட்பட மூன்று சுற்றயல்கூறு மருத்துவமனைகள், நான்கு மருந்தகங்கள், மகப்பேற்று மனைகள், ஐந்து மத்திய மருந்தங்கள் உட்பட 14 வைத்தியசாலைகளிலேயே கடந்த பல வருடங்களாக இந்த ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதென பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## திருடியவர்கள் அகப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் கச்சான் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெண்மணியிடமிருந்து பணத்தைத் திருடிய இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தவறி வீழ்ந்தவர் படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த 'கன்ரர்' ரக வாகனமொன்றிலிருந்து தவறுதலாக வீழ்ந்து, இளைஞரொருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை கல்வியங்காட்டில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சோந்த து.றமேஸ் (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கட்டட வேலைசெய்யும் தொழிலாளியான இவர், கொழும்புத்துறைப் பகுதிக்குக் கல் ஏற்றுவதற்காகச் சென்றபோதே, இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வதிவிட விளையாட்டுப் பயிற்சி முகாம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால், யாழ். மாவட்டத்திலுள்ள 170 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கான வதிவிட விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29, 30, 31 ஆகிய 3 தினங்களும், யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ள இவ் விளையாட்டு முகாமில் - 90 இளைஞர், யுவதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மெய்வல்லுநர், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் பயிற்றுவிக்கப்படுமெனவும், பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் - இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

## இளைஞர் யுவதிகளுக்கான ஆங்கில வகுப்பு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலத்தினால், இளைஞர் யுவதிகளுக்கான ஆங்கில அறிவினை மேம்படுத்தும் வகையில், ஆறுமாதகால ஆங்கில வகுப்பொன்று நடத்தப்படுகின்றது.

இதற்கென, வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் இளைஞர் பிரிவு, ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவியினை வழங்கியுள்ளது.

இந்த ஆங்கிலப் பயிற்சி நெறி வகுப்புக்கள் - கோப்பாய் மத்தி இளைஞர் நிலையம், கரவெட்டி இளைஞர் பயிற்சி நிலையம், இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் ஆகிய இடங்களில் நடத்தப்படுவதுடன், ஒவ்வொரு இடத்திலும் 30 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போது கல்வி பயின்று வருகின்றனர்.

18 முதல் 29 வயதிற்கு இடைப்பட்ட எவரும், இந்த ஆங்கிலப் பாடநெறியினைக் கற்கமுடியுமெனவும், பாடநெறிமுடிவில் உயர் கல்வி ஆங்கிலப் பயிற்சிநெறி சான்றிதழ்கள், இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏழாவது ஆண்டு ஆரம்ப விழாவினதும், சிறுவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும், யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு, சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமை தாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக - சமூக சேவைகள் திணைக்களத்தின் ஜே.வி.சிவநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

# சீநோரை மேம்படுத்துவதற்கு அதிகாரிகள் ஆலோசனை!

(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனத்தை (சீநோர்) மேம்படுத்துவது குறித்து, அதிகாரிகள் ஆலோசித்துவருகின்றனர்.

கடந்தகால யுத்தங்களினால்- நீண்டகாலமாக சீநோர் நிறுவனத்தின் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டு, 24 மணிநேரமும் இயங்கிய இந்த நிறுவனம் - தற்போது மிகவும் சொற்ப தொழிலாளர்களுடன், தேவைக்கேற்றபடி மீன்பிடி வலைகளை மட்டுமே உற்பத்திசெய்துவருகிறது.

மிக அண்மையில்தான் - இந்த நிறுவனம் இந்து கலாசார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர், சிறிதுசிறிதாக சீநோரின் செயற்பாடுகளை விஸ்தரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் : கி.பிரணவன்
முகவரி : சீனிவாசகம் வீதி, கொட்டடி.



முதலாவது அகவையில்



பெயர் : க.வினோஜன்
முகவரி : மகாத்மா வீதி, நெல்லியடி.

இரண்டாவது அகவையில்

பெயர் : வ.பிரஷாத்
முகவரி : 2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.



பத்தாவது அகவையில்



பெயர் : செ.ரிஷாந்
முகவரி : பாலாவோடை, இணுவில் மேற்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றார் ஒப்பம்

# கணினிக் கல்வியில் திறமையான சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி)

முதலாவது அரையாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்தால் **Certificate in Information Technology (CIT)** என்ற சான்றிதழையும், முதலாம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்தால் **Associate Diploma in Information Technology (ADIT)** என்ற சான்றிதழையும், இரண்டாம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால் **Diploma in Information Technology (DIT)** என்ற சான்றிதழையும், மூன்றாம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான மாணியும், நான்காம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தால் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும் பெறலாம்.

இந்தக் கற்கைநெறியினை மாணவர்கள் தேர்வு செய்து கொள்வதில் நன்மைகள் அதிகம் பெற வாய்ப்புண்டாகிறது. ஒவ்வொரு படிநிலைக்கும் சான்றிதழ்கள் வழங்குவதால் மாணவர்கள் தமது கல்வியினை எந்த நிலையில் நிறுத்திக் கொண்டாலும் அதன் பலாபலன்களைப் பெறமுடியும். ஆனால் பல்கலைக்கழகப்பட்டத்தில் (உள்வாரி) இவ்வாறான சிறப்புத் தன்மையினைக் காணமுடியாது.

நாம் இனி இக்கற்கைநெறி தொடர்பான விபரங்களை நோக்குகையில், இது ஒரு முழுநேரக் கற்கை **(Full Time)** நெறியாகக் காணப்படுவதோடு, விரிவுரைகள் யாவும் ஆங்கில **(English)** மொழியிலேயே நடத்தப்படுகின்றன. விரிவுரைகள், பாடக்குறிப்புக்கள் **(Tutorials)** பரீட்சைகள், கணினி ஆய்வுகூடங்கள், நூலகம் போன்றவற்றிற்குரிய கட்டணமாக ஒவ்வொரு அரையாண்டுத் தொடக்கத்திலும் 36,000 ரூபா செலுத்தப்படவேண்டும்.

எனவே, நாம் நான்கு வருடங்களையும் முற்றாகக கற்று முடிக்க அண்ணளவாக 300,000ரூபா செலுத்தப்படவேண்டும். எனினும், இக்கற்கைநெறியில் பல புதிய மொழிகளையும் தகவல்தள மென்பொருட்களையும், தகவல் தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டங்களைக் கொண்டிருப்பதால், எமது அறிவு பன்மடங்குபெருக வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் நன்கு அனுபவமும் தகைமையும் உடைய விரிவுரையாளர்களைக் கொண்டு விரிவுரை நடத்தப்படுவதோடு, ஆய்வுகூடமானது பல புதிய வசதிகளையும் கொண்டு அமைந்துள்ளது.

இப்பட்ட செயற்திட்டத்தில் முக்கியமான விடயம் யாதெனில், **Srilankan Institute of Information Technology** என்ற நிறுவனமானது, அவுஸ்திரேலியாவில் உள்ள **Curtin University of Technology, Perth Western Australia** என்ற பல்கலைக்கழகத்துடன் இணைந்தே **Bachelor of Science in Information Technology** என்ற பட்டத்தினை வழங்குகின்றது.

இக்கற்கைநெறி தொடர்பாக மேலதிக விபரத்தினைப் பெறப் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**Website : WWW.sliit.lk**
**e.mail : infor @ sliit.lk**
**Post Address :SLIIT**
**16 the Floor,**
**Boc Merchant Tower,**
**28, st. Michale's Road,**
**Colombo - 03.**

இனி நாம் இலங்கைப் பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெறும் பரீட்சைகளை நோக்குவோம். இலங்கை வரலாற்றில் ஜே.ஆர். ஆட்சிக்காலத்திலேயே திறந்த பல்கலைகழகங்களும் **(Open University)** பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பிரிவும் **(External Unit)** உருவாக்கப்பட்டு தகுதியுள்ள எல்லோரும் பட்ட செயற்திட்டத்தினைப் பின்பற்ற வழிகிடைத்தது. இதனைத்தொடர்ந்து வந்த பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் அதிக மாணவர்களைப் பட்ட செயற்திட்டத்தின் கீழ் உள்வாங்கும் முறையாக, இந்திய பல்கலைக் கழகங்களில் காணப்பட்ட கல்லூரி முறை உருவாக்கப்பட்டது. அதாவது, பிரதான பல்கலைக்கழகங்களின் கீழ் பல்கலைக்கழக கல்லூரிகள் **(University College)** உருவாக்கப்பட்டன. இவை பின்பு வளாகங்களாக **(Campus)** மாற்றப்பட்டு பிரதான பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன.

இந்த முறையின் அடிப்படையிலேயே கொழும்பு பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பாடசாலை **(University School)** ஒன்றை உருவாக்கி அதன் கீழ் வெளிவாரியாக



தகவல் தொழில்நுட்பமாணி **(BIT)** ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவரும், பல்கலைக்கழகத்தில் தகவல்தொழில்நுட்பத்தைக் கற்காதவர்களும், தகவல்தொழில்நுட்பத்தில் **(Information Technology)** அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைப் பெறுவதே ஆகும்.

**BIT (Bachelor of Information Technology)** கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. **G.C.E. (A/L)** இல் ஒரே அமர்வில் குறைந்தது மூன்று பாடத்தில் சாதாரணசித்தியும்,
2. **G.C.E (O/L)** இல் கணித பாடத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அல்லது இதற்கு இணையான வேறுகல்வித் தகைமைகளையும் மாணவர்கள் கொண்டிருக்கலாம்.

மேலும் இக்கற்கைநெறிக்குரிய மாணவர்கள், தகுதிகாண் பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவார்கள். மூன்றாண்டினைக் கொண்ட இக்கற்கைநெறிக்கான பரீட்சைகள் முழுவதும் ஆங்கிலமொழிமூலமே நடத்தப்படும்.

இதற்கான நுழைவுத் தேர்வானது - ஆங்கிலமொழி மூலம் நடத்தப்படுவதோடு, இவை **G.C.E. (O/L)** கணித பாடத்திட்டத்தைத் தழுவிய வினாக்களாகவும், நுண்ணறிவு வினாக்களாகவும் சுமார் 50 தொடக்கம் 60 வரையான வினாக்கள் கேட்கப்படும். வினாக்கள் யாவும் பல்தேர்வு **(MCQ)** தன்மை கொண்டவை ஆகும்.

இத்தகுதிகாண் பரீட்சை வினாத்தாள்கள் கணினி மூலம் திருத்தப்படுவதோடு, ஒவ்வொன்றும் ஐந்து விடைகளைக் கொண்டிருக்கும். இவை இரண்டு மணித்தியாலங்கொண்ட வினாத்தாள்களாகும். நுழைவுத் தேர்வில் சித்திபெற்ற அனைவரும் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடங்கலாம். ஒருவர் குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெற்றாலே சித்தியெய்தியவராகக் கருதப்படுகின்றார்.

மூன்று வருடங்களைக் கொண்ட இக்கற்கைநெறியானது- முதலாம் வருடம் சித்தியடைந்தால், **Certificate in Information technology (CIT)** என்ற சான்றிதழையும், இரண்டாம் வருடம் சித்தியெய்தினால், **Advanced certificate in information Technology (ACIT)** என்ற சான்றிதழையும், மூன்றாம் வருடத்தை முழுமையாகப் பூர்த்தி செய்பவர்கள், தகவல் தொழில்நுட்பமாணிப் பட்டத்தைப் பெறுவர். **(BIT - Bachelor of Information Technology)** இப்பாட நெறியானது முழுக்க முழுக்க கணினி சார்ந்ததாக அமைவதோடு, இலங்கைப் பல்கலைக்கழக உள்வாரி **(Internal)** மாணவர்களிற்கு உரிய பாடத்திட்டத்தினைத் தழுவியதாகும்.

இவை பற்றிய மேலதிக விபரங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்ள **WWW.ict.cmb.as.lk/bit.htm** என்ற இணையத் தளத்தினை **Down loard** செய்யவும்.

உழைப்போம் உயர்வோம்! தொழில் மலர்

இனி நாம் இதுவரையில் எமது நாட்டில் கணினிக் கற்கையிலான பட்டப்படிப்பினைத் தொடர முடியாதவர்களுக்கும், ஏனைய கணினி ஆர்வலர்களுக்கும், தேசியரீதியில் அங்கீகாரம்பெற்ற சான்றிதழினை எவ்வாறு பெறுவது என்பது பற்றி நோக்குவோம்.

இந்த வகையில், கணினித் துறையில் அரசின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழாக, **Srilanka Compurter Driving license (SLCDL)** விளங்குகின்றது. தேசிய பயிலுனர் கைத்தொழிற்துறை அமைச்சு **(NAITA)** இனால் நடத்தப்படும் இப்ரீட்சைக்குத்தோற்றுவதற்கு அனுமதித் தகைமைகள் எதுவும் கோரப்படவில்லை.

தகவல் தொழினுட்பத்தின் போட்டி மட்டத்திற்கு அனைவரையும் உயர்த்துதல், வேலைவாய்ப்பை எளிதாக்குதல், தொழில்புரிவோர் மட்டத்தில் அபிவிருத்தியையும், செயற்திட்டத்தையும் அபிவிருத்திசெய்தல் போன்றவற்றை நோக்கங்ளாகக் கொண்டு இப்பரீட்சை நடத்தப்படுகின்றது.

**Ms Office** பாடத்திட்டத்தைத் தழுவியதாக பரீட்சைக்கான பாடத்திட்டம் அமைந்துள்ளது. கணினியில் பட்டம் பெற்ற அறிஞர் குழுவால், தகவல் தொழினுட்ப அமைப்பின் **(CINTEC)** வழிகாட்டலின் கீழ் - இப்பரீட்சைக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கேற்ப காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்படுகிறது.

இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டமானது, ஏழு **Module**களை உள்ளடக்கியது. அவையாவன -

1. **a.** தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படைகள்
   **(Basic Concepts of Information Technology)**
   **b.** கணினியைப் பயன்படுத்தி கோப்புக்களைக் கையாளுதல்.
   **(Using a Computer and Managing Files)**
2. வேட் புரோஸஸிங் **(Word processing)**
3. ஸ்பிரெட்ஷீற் **(Spread Sheet)**
4. தகவல் தளம் **(Data base)**
5. பிரசன்டேஷன் **(Presentation)**
6. **a.** மின்னஞ்சல் **(E.mail)**
   **b.** இணையம் **(Internet)**
7. தகவல் தொழில்நுட்பம் **(Information Technology)**

இந்த **Module** களில் ஏழாவது மட்டுமே எழுத்துப் பரீட்சையாக நடத்தப்படும். இதில் 100 வினாக்கள் கேட்கப்படும். இந்த **Module** தவிர்ந்த ஏனையவை அனைத்தும் செய்முறைப் **(Practical)** பரீட்சையாகவே நடத்தப்படும். வயது வேறுபாடின்றி எவரும் தோற்றக்கூடிய இப்பரீட்சைக்காக, பரீட்சார்த்திகள் விசேட வகுப்புகளிற்குச் சென்று, வீண செலவு செய்யவேண்டிய தேவையில்லை. சுயகற்றலின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறலாம்.

இப் பரீட்சையானது - இரு நாட்கள் நடத்தப்படுவதோடு, பாடத்திட்டத்தின் முதல் நான்கு **Module** களும் முதல் நாளன்றே நடத்தப்படும். இவை 3 1/2 மணித்தியாலங்களைக் கொண்டது. இரண்டாம் நாள் அடுத்த மூன்று **Module** களும் நடத்தப்படுகின்றன. இவை மூன்று மணித்தியாலங்களைக் கொண்டன.

இப்பரீட்சைக்கான கட்டணத்தினை நோக்குகையில்- முதன்முறையாகத் தோற்றுவதாயின், 750 ரூபா கட்டணமாக செலுத்தவேண்டும். ஒரே தரத்தில் ஏழு **Module** களிலும் சித்திபெற்றால் **SLCDL** என்ற சான்றிதழுடன் **CINTEC - Council for Information Technology** இனால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்.

இவை பற்றிய மேலதிக தகவல்களைப் பெற,

**NAITA**
**971, Sri jayawardanapura,**
**Welykkadai,**
**Rajagiriya.**

என்ற முகவரியுடனோ அல்லது 863680, 872039 என்ற தொலைபேசி மூலமோ தொடர்புகளைப்பெறலாம். மேலும், நீங்கள் இலகுவாகத் தொடர்பு கொள்வதற்கு உங்களது மாவட்டங்களில் இவர்களின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களை அணுகலாம். உதாரணமாக, யாழ்.மாவட்டத்தில் **IIS (Institute of Informatics Studies)** குறிப்பிடலாம்.

இதுவரை நாம் சர்வதேச **(International)** பரீட்சைகள், தேசியப் **(National)** பரீட்சைகள், பல்கலைக்கழகப் பட்டப் பரீட்சைகள் **(Degree)**, இணையப் பரீட்சை **(Online Exam)** என்பன பற்றிப் பார்ததோம். ஆனால், இனி நாம் பார்க்கப்போவது, இணையப் பல்கலைக் கழகத்தின் **(Internet University)** பரீட்சை ஆகும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் **(TAMIL VIRTUAL UNIVERSITY)** 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் வேந்தராக, இந்தியாவைச் சேர்ந்த மு.பொன்னவைக்கோ இருக்கின்றார். இப் பல்கலைக்கழகத்தின் நோக்கம் தமிழைக் கற்பிப்பதாகவே தற்பொழுது காணப்படுகின்றது.

(தொடரும்....)

**சேனாதிராசா ஜெயானந்தன்**
இடைவரவு விரிவுரையாளர்(computer)
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | உள்ளூராட்சி மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | கொமர்ஷல் லீசிங் கம்பனி லிமிடெட் | பதிவாளர் நாயகம் திணைக்களம் |
| --- | --- | --- | --- |
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | திட்டப் பணிப்பாளர் திருகோணமலை | 1. விளம்பரக்கடன் வழங்கல் அதிகாரி, பம்பலப்பிட்டி.<br>2. உதவி இயக்குநர் கொழும்பு, நீர்கொழும்பு, திருகோணமலை - 02 வெற்றிடங்கள் | 1. விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி. யாழ்ப்பாண மாவட்டம். 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு. |
| அடிப்படைத் தகுதி | பொறியியல், விஞ்ஞானம், பொருளாதாரம், வர்த்தகம், முகாமைத்துவம் - ஏதாவது ஒன்றில் பட்டதாரி அல்லது இவை சார்ந்த ஏதாவதொரு துறையில் 12 வருட அனுபவம்.<br>அல்லது<br>பட்டப்பின்படிப்புடன் 5 வருடங்கள் நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய அனுபவம். | 1. பட்டதாரி அல்லது அதற்கு நிகரான தகைமை (CIM/CIMA பகுதிச் சித்தி) வயதெல்லை: 23 - 30<br>2. க.பொ.த. (உ/த)3 பாடங்களில் சித்தி, MS.OFFICE , உரிய இடங்களில் நிரந்தர வசிப்பிடதாரி. வயதெல்லை: 19 - 25 | 1. விவாகமானவராக இருத்தல்வேண்டும்.<br>2. வயதெல்லை 21 - 60<br>3. சமுதாய நன்மதிப்பு உள்ளவராக இருத்தல்வேண்டும்.<br>4. குறிப்பிட்ட சொத்திற்கு உரிமையாளராக இருத்தல்வேண்டும்.<br>5. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 12.09.2003 | 24.08.2003 | 15.09.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# உலோகங்களில் கலைநயம் காணும்

**கல்லிலே கலைவண்ணம் கண்டான் என்பதுபோல, உலோக வேலைகளிலே கலையின் உச்ச உணர்வுகளைத் தரும் பிளேற்றிங் பாலா எனப்படும் எஸ். பாலசுப்பிரமணியத்தை, அவரது தொழிலில் ஈடுபட்டுள்ளபோது சந்தித்தோம். அவரைச் சுற்றி கோபுர கலசங்களும், சித்திரத்தேருக்கான கலசங்களும், கொடித்தம்ப கலசங்களும் குவிந்து கிடக்கின்றன. அருகே அவரது உதவியாளர் வடிவேல் அவர்கள் - உலோக வேலைகள், மின் முலாமிடல் வேலைகள் எனப் பல வேலைகளிலும் நீண்ட காலமாக தனது திறமையை நிரூபித்து வரும் பிளேற்றிங் பாலா கூறிய கருத்துக்களின் தொகுப்பு**



எஸ்.பாலசுப்பிரமணியம்

**தாங்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட ஆரம்பித்தமை பற்றயும், எவ்வாறு உலோக வேலைகளைக் கற்றுக் கொண்டீர்கள் என்பது பற்றியும் கூறமுடியுமா?**

1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த யாழ். மெற்றல் (Metal) எனும் ஸ்தாபனத்திலேயே முதன்முதலில் இது தொடர்பான வேலையில் இணைந்தேன். அங்கு பதினைந்து நாட்கள் பயிற்சியாளனாக இருந்தேன். அங்கு எமக்கு இந்தியக் கலை நிபுணர்களே இந்தக் கலையைக் கற்றுத் தந்தார்கள். அவர்கள் உதவியுடன்தான்- நான் இயந்திரம் மூலமாக இந்தத் தொழிலைச் செய்து கொள்ளும் நுட்பத்தைப் பழகிக்கொண்டேன். அதற்கு முன்னர் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், தமது கை வண்ணங்களினாலேயே இத்தகைய வேலைகளை செய்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.அலுமினியத் தொழிற்சாலையிலே- சில முரண்பாடுகள் தோன்றிய போது நான் அதிலிருந்து விலகி, வேறு ஒரு தொழிற்சாலையிலே என்னை இணைத்துக்கொண்



டேன்.

அதன் பின் சில முஸ்லிம் நண்பர்களினதும், தமிழ் நண்பர்களினதும் தொழிற்சாலைகளை நான் தக்கமுறையிலே அமைத்து, அவர்களுக்கு வேண்டிய இயந்திரங்களையும் பொருத்திக் கொடுத்தேன். குறிப்பாகச் சொல்வதானால், மறைந்த அளவையூர் நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் அளவெட்டியில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தபோது, நானே அதை சிறப்பாகப் பொருத்துகை செய்து கொடுத்து சிறியகாலம் அங்கு பணியாற்றினேன். அதன்பின் - தற்போது இணைந்து வேலை செய்யும் சிற்பக்கலை ஞர் பாஸ்கரனோடு வேலைசெய்ய ஆரம்பித்து, முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இவரோடு இணைந்து - மின் முலாமிடல் (Electro plating), இயந்திர வேலைகள் என்பனவற்றைத் தற்போது செய்துவருகின்றேன்.

**தொழிற்துறையிலே சிறந்த ஒரு இடத்தைப் பிடிப்பதற்கு தாங்கள் எதிர்நோக்கிய சவால்கள், இடர்பாடுகள் பற்றி குறிப்பிட முடியுமா?**

ஆம். இந்த வேலை மிகவும் ஆபத்து நிறைந்தது. தவறுதலாகவோ அல்லது கவனயீனமாகவோ ஏதேனும் பிழைகள் நடந்துவிட்டால் - கை, கால், கண் போன்ற உறுப்புக்களையே இழக்கவேண்டிவரும்.

ஆனாலும், நாம் இந்தத் தொழிலைச் செய்யவேண்டும் என்னும மனஉணர்வு இருந்தமையினாலேயே, இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்துவருகின்றேன். யாழ். அலுமினியத் தொழிற்சாலையில் வேலைசெய்தபோது, கையில் முறிவு ஏற்பட்டது. பின் பத்மநாதனுடைய தொழிற்சாலை பொருத்துகையின்போது, காலில் முறிவு ஏற்பட்டது. ஆவரங்காலில் - சிவன் கோவிலில் தேரின் வேலைகள் செயயும போது மூக்குப் பகுதியிலே படுகாயமுற்றேன். இதனால, தற்போதுகூட எனக்கு நுகரும் தன்மை குறைவாகவே உளளது. இவ்வளவு ஆபத்துக்களைக் கண்டும் பயம் கொள்ளாது தொடர்ந்து வேலைசெய்து வந்தமையினால்தான், இன்று இந்தத் தொழிலிலே ஒரு சிறப்பான இடத்தைப் பெறமுடிந்தது.

**இந்தியத் தொழில் விற்பன்னர்களோடு தாங்கள் பழகிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

நான் இளைஞனாக இருந்தபோது, இந்தியக் கலைஞர்களுடன் இணைந்து பணியாற்றினேன். குறிப்பாக - கிருஷ்ணர், பாண்டியன், ஏகாம்பரம் ஆகியோரைக் கூறமுடியும். அப்போது எனது சில நுட்பமான வேலைகளைக் கண்டு அவர்கள் பின்னர் பாராட்டிய சந்தர்ப்பங்களும் நிறையவே உண்டு. அவர்கள் தங்களோடு என்னை வரும்படி அழைத்தார்கள். ஆனால், நான் யாழ்ப்பாணத்திலே இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனும் நோக்கோடு, அந்த அழைப்பை ஏற்க மறுத்தேன்.

**இந்தத் தொழிலை உங்களுக்குப் பின்னர் செய்வதற்கு, யாராவது உங்கள் வழியிலே உள்ளார்களா?**

என்னுடைய மகனொருவர் இந்தத் தொழிலைப் பழகிவந்தார். மிகவும் திறமையானவர். ஆனால், துரதிஷ்டவசமாக அவர் 29 வயதிலே ஒரு விபத்திலே காலமாகிவிட்டார். அது எனனை வெகுவாகப் பாதித்தது. அதனால், சொந்தமாக நான் வைத்திருந்த தொழிற்சாலையின் உபகரணங்களைகூட விற்றேன். ஏனெனில், அவரைத் தவிர- எனது பிள்ளைகளிலே வேறு எவரும் இந்த தொழிலைப் பழகும் ஆர்வம் இல்லாதவர்கள். ஆனாலும்- நான் பல இளைஞர்களை அழைத்து, இந்தத் தொழிலைப் பழகும்படி கூறுகிறேன். அனேகமானோர் ஆபத்தைக் கண்டு விலகிக்கொள்கிறார்கள். ஒரு சிலர் இந்தத் தொழிலைப் பழகி, நாட்டின் பல பாகங்களிலுள்ள தொழிற்சாலைகளிலே பணிபுரிகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

# ஒரு கலைஞனின் கைவண்ணம்



**இந்தத் தொழிலில் ஈடுபட்டமை தொடர்பாக தாங்கள் கூற விரும்புவது யாது?**

நான் ஒருபோதும் வருமானத்தைக் கருதி இந்தத் தொழிலைச் செய்யவில்லை. ஆலயங்களுக்கு மிகவும் தேவையான கலசங்கள், கொடித்தம்பம் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில் என்பதால், தெய்வீகப்பற்றோடுதான் இந்தத் தொழிலை மேற்கொள்கிறேன். அத்தோடு எனது வருமானமும் போதுமானதாகவே உள்ளது. சிலவேலைகளில் ஒரு நாளில் நாலாயிரம் ரூபாவிற்குமேல்கூட சம்பாதித்த அனுபவமும் உண்டு.

**உங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை எங்கிருந்து பெறுகிறீர்கள்?**

கொழும்பிலிருந்துதான் பெறுகின்றோம். அது தரத்தில் சற்றுக் குறைவாகத்தான் உள்ளது. வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக - ஜப்பான், ஹொங்கொங் போன்ற நாடுகளில் இருந்துவரும் தகடுகள் தரமானவை. தற்போது ஏ -9 பாதை திறந்த பின்னர் மூலப்பொருட்களின் விலை, சற்று வீழ்ச்சி அடைந்துள்ளது. இது ஓரளவு ஆறுதலாக உள்ளது.

**இறுதியாக இந்தத் தொழிலை மேற்கொள்ள விரும்புவோருக்கு நீங்கள் கூற விரும்புவது யாது?**

எமது மக்கள் மத்தியிலே இந்தியப் பொருட்கள்தான் தரமானவை எனும் கருத்துண்டு. தற்போது அவற்றைவிட எமது பிரதேசப் பொருட்கள் தரம் மிக்கவையாக மாறியுள்ளன. இந்த நிலை தொடர்ந்து நிலைக்க அனைவரும் பாடுபடவேண்டும். எந்தவொரு தொழிலைச் செய்யும்போதும் குருபக்தி அவசியம். இன்றுகூட நாம் எமது குருவை மறந்துவிடவில்லை. ஆர்வமுள்ள இளைஞர்கள் இந்த தொழிலிலே ஈடுபடும்போது எமதுநாடு வளம்பெறும். எனவே இத்தொழில் பழக இளைஞர்கள் முன்வரவேண்டும்.

இந்தத் தொழிலைச் செய்யும்போது நான் உடல்ரீதியாகப் பலமாகத்தான் உள்ளேன் எனும் நிறைவு ஏற்படுகிறது. இந்தத் தொழிலிலே குறித்த தவணைக்கு வேலைகளைச் செய்து கொடுப்பதுதான் முக்கியம். அதை எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும்.

***சந்திப்பு: சர்வேஸ், மதன்***


## தரம்மிக்க விமானசேவையை வழங்கிவரும் எக்ஸ்போ எயர்!

எக்ஸ்போ எவியேசன் - இப்பொழுது பொக்கர் F 27 **(Fokker F 27)** விமானம் ஒன்றை தனது யாழ்பபாண சேவையில் ஈடுபடுத்தி, நிறுவனத்தின் கொள்கையான உயர்ந்த தர சேவையில் இன்னுமொருபடி ஏறி வெற்றிகண்டுள்ளது.

50 இருக்கைகள் கொண்ட **Fokker F 27** விமானம், ஹொலண்ட்டில் தயாரிக்கப்பட்டு, றோல்ஸ் றோய்ஸ் **(Rolls Royce)** இயந்திரத்தினால் இயக்கப்படுகின்றது. இதில் பயணிகள் கால்களை சௌகரியமாக வைப்பதற்கு போதிய இடமும், தலைக்குமேல் பொருட்களை வைப்பதற்குரிய விசேட அறைகளும் பயணிகளுக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

'எக்ஸ்போ எவியேசன் (பிறை) லிமிட்' என்பது 'எக்ஸ்போ எயார்' வானில் உங்கள் நண்பன் என்ற வியாபார பெயர் சூட்டப்பட்டுள்ளது,

மேலும் இது பயணிகளுக்கு விசேடமான சேவையை வழங்குவதற்காகவே செயற்பட்டு வருகிறது.

'எக்ஸ்போ எயர்' ஆனது நெக்ஸஸ் லோயல்டி **(Nexus loyalty)** கீழுள்ள 27 அங்கத்தவர்களில் ஒன்றாக விளங்குகின்றது.





# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சங்கானை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 25/= | 30/= | 40/= | 15/= | 35/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 60/= | 70/= | 65/= | 60/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 40/= | 45/= | 25/= | 60/= |
| பாகற்காய் | 20/= | 30/= | 15/= | 40/= | 10/= | 20/= |
| வெண்டிக்காய் | 10/= | 10/= | 20/= | 20/= | 05/= | 10/= |
| கரட் | 40/= | 70/= | 40/= | 60/= | 30/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 10/= | 20/= | 20/= | 06/= | 15/= |
| முருங்கைக்காய் | 40/= | 60/= | 40/= | 70/= | 40/= | 70/= |
| வெங்காயம் | 30/= | 20/= | 30/= | 25/= | 25/= | 25/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 60/= | 70/= | 45/= | 40/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

*கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவனையும் மாண்டது அமைச்சு.*
*-திருக்குறள்.*

## நமது நோக்கு

# ஆபத்தான அரசியல் நகர்வு

ஒருபுறத்தில் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவிப்பது தொடர்பான முயற்சிகளும், ஆலோசனைகளும் தொடர்ந்து கொண்டிருக்க - தென்னிலங்கை அரசியற்களத்தில், ஜனாதிபதி சந்திரிகா மாற்று அரசியல் வியூகமொன்றை வகுக்கத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எப்படியாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு - ஆட்சியைப் பிடித்துவிடவேண்டும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்துவிட வேண்டும் ஆகிய நோக்கங்களுடனேயே ஜனாதிபதி சந்திரிகா, இந்த நகர்வுகளில் தீவிர கவனம் செலுத்திவருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சமீபகால அரசியல் நகர்வுகள், ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து எப்படியாவது தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடவேண்டும் என்பதையே குறியாகக் கொண்டுள்ளது.

ஆனால், இதுவரை ஜே.வி.பியினருடன் கூட்டணி அமைக்கும் முயற்சியில், ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியால், அவ்வளவு முன்னேற்றங்களை எட்டமுடியவில்லை. ஏதோ பேச்சுக்கள் நடக்கின்றன என்றும் - இந்த வாரம், அடுத்த வாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டனவே தவிர, இன்றுவரை இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்த நிலை ஒருபுறமிருக்க, எப்படியாவது ரணில் ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும் எனத் துடிக்கும் சந்திரிகாவுக்கு, இப்போது இருக்கும் ஒரே தெரிவு - நாடாளுமன்றத்தைக் கலைப்பதுதான்.

இப்போது - நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய பூரண அதிகாரம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இருக்கிறது. ஆனால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டால் மீண்டும் தேர்தல் நடத்தித்தான் ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்ற நிலை.

தேர்தல் நடத்தாமல் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இருக்கும் ஒரே வழி - நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவி நீக்கிவிட்டு, புதிய அரசை அமைக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு ஆட்சியமைப்பதற்கு போதிய பலம் பொதுஜன ஐக்கிய முன்னணியிடமோ அல்லது ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தோ பெறமுடியாது என்பதுதான் ஜனாதிபதி சந்திரிகாவை யோசிக்கச் செய்துள்ளது.

இதனால்தான், அவர் இதுவரை இந்த அரசாங்கத்தை விட்டுவைத்திருக்கிறாரே தவிர - நாட்டு நன்மை கருதியோ அல்லது ரணில் மீது கொண்ட பச்சாதாபத்தினாலோ அல்ல, என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இனிமேலும் இந்த ஆட்சியை விட்டுவைத்தால், தமது அரசியல் எதிர்காலத்துக்கே ஆபத்தானது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துவிட்டார்போல தெரிகிறது.

இதனால்தான் - தமக்கு இருக்கின்ற ஒரே வழியான நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது என்ற முடிவுக்கு சந்திரிகா வந்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இப்போது, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டால், அடுத்ததாக தேர்தல் நடத்தி வெற்றிகாணவேண்டுமே? இது சாத்தியமா என்ற சந்தேகம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இன்னமும் இருந்துவருகின்றது.

இதனால்தான் தமது கட்சியின் செல்வாக்கை நாடிபிடித்துப் பார்க்கும் நோக்கத்தில், மாகாணசபைகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் - ஆறு, தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியன் வசமும், ஒன்று மட்டுமே ஐ.தே.கவிடமும் இருக்கின்றன.

இந்த மாகாணசபைகளின் ஆட்சிக்காலம் அடுத்த ஆண்டு ஜனவரிக்கும், ஏப்ரலுக்கும் இடையில் முடிவடையவுள்ளது. இதனால் இந்த மாகாணசபைகள் - குறிப்பாக பொ.ஐ.முவின் வசமுள்ள மாகாணசபைகளின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, தேர்தல் நடத்துவதற்கு வசதியாக ஜனாதிபதி சந்திரிகா வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றி கிடைத்தால்- அடுத்தது நடாளுமன்றக் கலைப்பு, பொதுத்தேர்தல் என்று அவரது நடவடிக்கைகள் தொடரும்.

இலங்கையில் இப்போதைய சமாதான முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கான அரசியல் நகர்வுகளாகவே இவை தெரிகின்றன. ஆட்சியைக் கவிழ்த்து, சமாதான நகர்வுகளை இடைநிறுத்துவதில் ஆர்வம் காட்டும் சந்திரிகா, தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், சமாதான முயற்சிகளைத் தொடர்ந் தேயாகவேண்டும்.

இப்படியான நெருக்கடியான சூழல்தான் இப்போது நிலவுகின்றது. மாறாக புலிகளுடன் பேச்சுநடத்தாமல் சந்திரிகா புதிய பாதையில் செல்ல முற்பட்டால், அவர் சர்வதேச ஆதரவை இழக்கநேரிடும்.

இதனால், சந்திரிகா இப்போது எடுக்கும் எந்த அரசியல் நகர்வுமே ஆபத்தானதாகவே இருக்கப் போகிறது.

# உற்சவகால தொண்டர் அமைப்புகள் சிறந்த சேவையாற்ற வேண்டும்

## முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம்

உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் தமிழ் மக்கள் சங்கமிக்கின்ற நல்லூர்க் கந்தன் உற்சவநாள்களில், கடமை புரியும் தொண்டர் அமைப்புக்கள் - தமக்கிடையேயான தனிப்பட்ட குரோதங்களை மறந்து பக்தர்களுக்கு சிறந்த சேவையாற்ற முன்வரவேண்டும் என்று, உற்சவகால சிறப்புச் செயலணித் தலைவரும் மாநகரசபை முன்னாள் ஆணையாளருமாகிய சி.வி.கே. சிவஞானம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற சிறப்பு செயலணியின் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

தொண்டர் அமைப்புக்கள் சில தமது தனிப்பட்ட பகைமை காரணமாக சிறந்த சேவையாற்றுவதிலை எனக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

கார்த்திகைத் திருவிழா முதல் இடம்பெறும் உற்சவங்களில் பெருந்திரளான பக்தர்கள் கூடுவார்கள் எனவும், இக்காலங்களில் தொண்டர் அமைப்புக்கள் மேலும் சிறப்பாகச் செயற்பட வேண்டும் எனவும், இக் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வன்னியில் பொலித்தீன் பாவனைக்கு தடைவிதிப்பதற்கு நடவடிக்கை

வன்னி பிரதேசமெங்கும் பொலித்தீன் பாவனையை தடை செய்யும் பொருட்டு - தமிழீழ சுகாதார சேவையினர் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்ட காலத்திற்குப் பின்னும் உக்கி அழியாததும், சூழலை மாசுபடுத்தும் பொருளாகக் காணப்படும் பொலித்தீன் பாவனையை, செப்டம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் தடைசெய்யும் பொருட்டு, வியாபார நிலையங்கள் தெருவோரங்களில் கச்சான், கடலை போன்ற தின்பண்டங்களை விற்பனை செய்யும் பொழுது, பொலித்தீன் பைகளை பாவிப்பதை முற்றாகத் தவிர்க்குமாறும், பொலித்தீன் பைகளுக்கு பதிலாக கடதாசிப் பைகளை பயன்படுத்துமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். இவ்வறிவித்தலை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். (17)

## 'இலங்கையின் பொருளாதார வரலாறு' யாழ்.பல்கலையில் வெளியிடப்பட்டது!



வெளியீட்டுரையை நிகழ்த்துகிறார் பேராசிரியர் மோகனதாஸ்.

இலங்கையின் பொருளாதார வரலாறு என்ற நூல் - நேற்று மாலை 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறை தலைவர் வி.பி.சிவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - வரவேற்புரையை நூலாசிரியர் நித்தியானந்தன் நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையை - துணைவேந்தர் மோகனதாஸும், மதிப்பீட்டுரையை எ.ஜே.கனகரட்ண, பேராசிரியர் சண்முகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஏற்புரையை நூலாசிரியர் ப.நித்தியானந்தனும், நன்றியுரையை பொருளிற்துறை மாணவி துஷ்யந்தியும் ஆற்றினர்.

இந்த நூல் வெளியீடு - இளம் பொருளியற்துறை மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## காணித்தகராறு, வீட்டு பிரச்சினைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன!

யாழ்.குடாநாட்டில் காணித்தகராறுகள், வீட்டுப்பிரச்சினைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன, இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் தினமும் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

ஏ-9 பாதை திறப்பக்கப்பட்ட பின்பு, இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழும் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில், வீடுகளில் தங்கியிருப்போருக்குமிடையே தகராறு ஏற்படுகின்றது.

வீட்டில் இருப்போர் திடீரென வேறு வீட்டிற்கு செல்ல முடியாத நிலையிலும், வீட்டின் உரிமையாளர் தமது வீட்டை கொடுத்துவிட்டு வேறு எங்கும் செல்வது என்று தெரியாத நிலையும் உருவாகியுள்ளது. இது போன்ற சம்பவங்கள் யாழில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜூலை மாதத்தில் மட்டும்

## முள்ளியவளை வைத்தியசாலையில் 6666 நோயாளர்களுக்குச் சிகிச்சை!

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை அரசினர் வைத்திய சாலையில் - கடந்த ஜூலை மாதம் 6666 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவித்திருப்பதாவது வெளி நோயாளர் பிரிவில் - 4513 நோயாளர்களும் சாதாரண காய்சலால் 1060 நோயாளர்களும், சிரங்கினால் 585 பேரும், குருதிச் சோகையினால் 324 பேரும், மலேரியா காச்சலினால் 94 பேரும், வயிற்றோட்டத்தினால் 26 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில், கடந்தமாதம் மகப்பேற்றுக்காக 38 கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 26 சிசுப் பிறப்புகள் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக வங்கிகளில் கடனாகப் பெற்ற 1800 கோடி ரூபாவை அரசு மீளளிப்பு!

### நிதி அமைச்சு தெரிவிப்பு

கடந்த அரசாங்கம் - வர்த்தக வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்ற 1800 கோடி ரூபாவை, தற்போதைய அரசாங்கம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மீளச் செலுத்தியுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கம் 1998 இல் இருந்து 2001 வரை வங்கிகளிடமிருந்து 14, 121 கோடி ரூபாவை கடனாகப் பெற்றிருந்தது.

தற்போது, வங்கிகளின் வட்டியைக் குறைத்தும் வங்கிகள் அதிக லாபத்தைப் பெற்றுவருகின்றன என்று, பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடனுதவி கூட்டுறவு சங்கங்களுக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சினால் மானியமாக வழங்கப்பட 20 இலட்சம் ரூபா பணம், சங்க அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

முல்லை. செயலக மாநாட்டு மண்டபத்தில் சி.க.கூ.சங்க முல்லை மாவட்டத் தலைவர் - ம.சூசைமுத்து தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கருத்துரைகளை - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம், முல்லை செயலக நிர்வாக உத்தியோகத்தர் இரட்ணராசா, திட்டப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை, தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவு இணைப்பாளர் மூர்த்தி, சி.க.கூ. சங்க பிராந்திய சேவை உபதலைவர் கா.குணசிங்கம் ஆகியோர் வழங்கினார்.

புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம், துணுக்காய், ஒட்டிசுட்டான், கரைதுறைபற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவிலுள்ள சி.க.கூ.சங்க அங்கத்தவர்களுக்கு 20 இலட்சம் ரூபா பணம் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.74 | 97.21 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 153.20 | 154.64 |
| 1 யூரோ | 107.02 | 108.33 |
| 1 சுவிஸ் பிராங் | 69.06 | 70.74 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.93 | 64.09 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.86 | 25.86 |

## அம்பாள்குளம் கிராமத்தில் பாடசாலை அமைக்க ஏற்பாடு!

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் - புதிதாக அரசினர் பாடசாலை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

அப்பாள்குளத்தில் பாடசாலை அமைக்கும் விடயம் குறித்து அண்மையில் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டது.

இது குறித்து கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கருத்து தெரிவிக்கையில், அம்பாள்குளம். கிராமத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்படுவது சம்பந்தமாக, கல்வி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அனுமதி கிடைக்கப் பெற்றதும் 2004 தை மாதம் பாடசாலை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

# கழிவுப்பொருட்களைக் கொட்டும் மையங்களாகியுள்ள மயானங்கள்!

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்த மடா"

என்றான் ஒரு கவிஞன். ஆம் இந்த உலகத்தில் மானிடனாகப் பிறந்த ஒவ்வொரும், தம் வாழ்நாளில் எவ்வளவு ஆட்டம் ஆடினாலும், இறுதியில் எல்லாம் ஓய்ந்த பின்னர்- இந்த ஆறடி நிலமே சொந்தமென அடங்கிப் போகின்றனர். அரசன்-ஆண்டி, அறிஞன்-மூடன், ஏழை-பணக்காரன், உயர்ந்தவன-தாழ்ந்தவன் என்ற எவ்வித வேறுபாடுமின்றி, அனைவரும் ஒன்றாய் உறங்கும் ஒரு சமரசம் வாய்ந்த இடந்தான் இந்த இடம்.



செய்திக் கட்டுரை

ஆம். அந்த இடந்தான் மயானம் என்று அழைக்கப்படுகின்ற சுடுகாடு, இடுகாடுமாகும். இந்த மயானங்களிலேதான் மனிதன் நிம்மதியாக உறங்குகின்றான். தமக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து, ஒற்றுமையாக உறங்குகின்றான். இந்த வகையில், மயானங்களும் ஒரு புனித இடமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களேயாகும்.

பண்டைய காலத்தில் சுகாதார நோக்கங்களுக்காக இத்தகைய மயானங்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக, ஊரிலிருந்து தொலைவில் அமைத்தார்கள். பேய், பிசாசுகள் குடிகொண்ட இடங்களெனக் கதை பரப்பி, பயமுறுத்தி, சுடலைப் பக்கம்போகாதே எனத் தடுத்து வைத்தார்கள். அதனால்தானோ என்னவோ மயானங்கள் இன்றும் மயானங்களாகவேயுள்ளன. கழிவுப்பொருட்களைப் போடும் இடங்களாகவும், காடுகள், பற்றைகள் மண்டிய இடங்களாகவும், எவ்வித துப்பரவுமில்லாமல் காணப்படுகின்றன. தென்மராட்சிப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் - சரசாலை, வேம்பிராய், வண்ணாத்திப்பாலம், மட்டுவில் சிவன்கோவிலடி போன்ற இடங்களில் காணப்படும் இந்து மயானங்கள், ஏனைய மயானங்களை விடவும் மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன.

இந்த மயானங்களைச் சுற்றிவரப் பாதுகாப்பு எல்லை வேலிகளோ, மரநிழல்களோ இல்லை. சுற்றிவரக் கண்டல் காடுகளே மூடிக்காணப்படுகின்றன. வீதியிலிருந்து மயானம் வரை உட்செல்லும் பாதைகூட, முட்கள் நிறைந்ததாகவும், குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன், சடலங்களைத் தகனம் செய்யும் தகனமேடை கூட, பள்ளமான இடத்தில் காணப்படுவதால், மாரி காலத்தில் தகனஞ்செய்வது பெரிதும் சிரமமான காரியமாகவுள்ளது.

இந்த மயானங்களில் காணப்படும் இளைப்பாறும் மண்டபங்கள் யுத்தம் காரணமாகச் சேதமடைந்தும், விலங்குகளின் கழிவுகள் நிறைந்தும் காணப்படுகின்றன. அத்துடன், மயானம்தானே என்ற பொறுப்பற்ற தன்மை காரணமாக - மக்கள் தம் கழிவுப்பொருட்களைக் கொட்டும் இடமாகவும், இந்த மயானங்களைப் பயன்படுத்துவதும், சடலம் ஒன்றைத் தகனஞ்செய்து, அது சம்பந்தமான கிரியைகள் யாவும் முடிந்த பின்னரும், இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட எஞ்சியுள்ள தடி, தண்டுகள், போத்தல்கள், மட்பாண்டக்கழிவுகளை அப்புறப்படுத்தாதும் விட்டு விடுகின்ற தன்மையும், மக்கள் மத்தியில் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

செ. சுதாகரன்

ஆடி ஓய்ந்த பின், அமைதியாக மனிதன் உறங்குகின்ற இந்த மயானங்களுக்கு ஏனிந்த நிலை? இந்த நிலை பற்றி யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொது அமைப்புகளோ அல்லது அந்தப் பகுதிப் பிரதேச சபைகளோ இதனைச் சீர்செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்து மயானங்கள் யாவும் ஓர் புனிதத் தலமாகப் பேணப்பட வேண்டிய தும், கண்காணிக்கப்பட வேண்டிய தும் அவசியமாகும்.

தனித்தனியான மயான அபிவிருத்திக்குச் சங்கங்களை உருவாக்கி, மயானங்களை அபிவிருத்தி செய்ய முன்வருதல் வேண்டும். இவ்வாறான சங்கங்கள் - சிரமதானம் மூலம் மயானங்களைத் துப்பரவு செய்து, பாதுகாப்பு வேலிகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

மயானங்களில் தகனமேடை ஒன்று அமைக்கப்படுதல் அவசியமானது. தகனமேடை அமைப்பதற்குரிய நிதியை, அமைச்சிலிருந்து அல்லது நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து அல்லது பிரதேசசபை நிதியிலிருந்து அல்லது தொண்டு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மயானங்களில் சேதமடைந்து போயிருக்கும் மண்டபங்கள், கிணறுகள் ஆகியவற்றைப் புனரமைத்து, அவற்றைப் பாவனையில் கொண்டு வரல்வேண்டும்.

பிரதான வீதியிலிருந்து தகன மேடை, இளைப்பாறு மண்டபம் ஆகியவற்றுக்கு நிரந்தரமான பாதை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

மயானத்துக்குக் காவலாளிகளை நியமித்து, மயானப் பாதுகாப்பு, மயானப் பராமரிப்பு முதலியவற்றை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, மயானங்கள் புனித இடங்களாக மாற்றப்படுவதற்கு அவை துணையாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

❖

# ஒளியின்றிக் கிடக்கின்ற வழிகாட்டும் வெளிச்சவீடு



நெடுந்தீவு மாவிலித்துறை முகப் பகுதியில், கடந்த பல வருட காலமாகக் கம்பீரமாக, மக்களுக்கு வழிகாட்டவென நிமிர்ந்து நிற்கும் நெடுந்தீவுப் பிரதேசசபையின் பராமரிப்பில் உள்ள - வெளிச்சவீட்டில இப்போதுவெளிச்சம் வைக்கப்படுவதில்லை, இதனால் இரவுவேளைகளில தொழிலுக்குச் சென்றுவரும் படகுகள், இயந்திரக கோளாறு காரணமாகவோ, இயற்கை சீற்றத்தினாலோ நேரம் தாமதமாகிவரும் போதும் அத்துடன் இரவுவேளைகளில் வரும் பயணிகள் படகுகள் - கரையை அடைவதற்குப் பெரும் சிரமப்படுவது கண்கூடு.

தற்போது கட்டிடம் தான் உள்ளது. அதில் ஏறி விளக்கு வைக்கும் ஏணிகூட, உரிய பராமரிப்பு இன்றிப் பழுதடைந்து - இல்லாமலேயே போய் விட்டதுடன், இக்கட்டிடத்தில் மரங்களும் வளரத் தொடங்கி விட்டன. இதனை வெட்டக்கூட முயற்சி எடுக்காத நிலையில், நாளடைவில் இப்படி ஒன்று இருந்ததா? எனக் கேள்வி கூட எழும்புமானால் ஐயமில்லை.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் - வெளிச்சவீட்டிற்கு விளக்கு வைப்பதற்கு என்று ஒரு பணியாளரை ஒதுக்கி வைத்திருந்ததாக அறியப்படுகின்றது.

ஆனால், அன்று எத்தனையோ பேருக்கு வழிகாட்டிய இந்த வெளிச்சவீடு, இன்று கவனிப்பாரின்றி அழிந்து போகும் நிலையிலுள்ளது.

கடற்பயணத்தையே அனைத்து தேவைகளுக்கும் நம்பியுள்ள நெடுந்தீவு மக்களுக்கு - இக்கலங்கரை விளக்கு அவசியமானது என்பதை, ஏன்தான் பொறுப்பானவர்கள் கவனத தில் எடுக்கவில்லையோ தெரியாது.

இன்று நெடுந்தீவு - தாளைத் துறைப் பகுதியில் உள்ள தியாகி திலீபன் ஞாபகார்த்த கலங்கரை விளக்கம் - மீனவர்களுக்கு மட்டு மலல, நெடுந்தீவுக்கும் கலங்கரை விளக்கமாக ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறது. எனவே, துறைமுகப் பகுதியின் வெளிச்சவீட்டினையும் திருத்தி, எதிர்கால தற்செயல் ஆபததுக்களை நீக்க உரியவர்கள் வழி சமைக்கவேண்டும்.

கண்ணன்

# தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை
## மீண்டும் சொந்த இடத்திற்கு திரும்புமா?

வலி.வடக்கு மக்களின் உயிர்காக்கும் நாடியாக விளங்கும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை, கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து, பல்வேறு இடங்களில் இயங்கி- தற்போது தெல்லிப்பளையில் - முன்பு கூட்டுறவு வைத்தியசாலை இயங்கிய கட்டடத்தில், வசதியீனங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலையிலேனும், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் இந்த வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்க வைப்பதற்கு, சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ளாதிருப்பது, தமக்குக் கவலையளிக்கின்றது என, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைத்தியசாலையானது முன்னர் காங்கேசன்துறையில் சீமெந்துத தொழிற்சாலைக்கு வடக்குப் புறமாக உள்ள ஓரிடத்தில் இயங்கி வந்தது. அங்கு சுற்றுப்புறச்சூழலால் ஏற்பட்ட பாதிப்பினால், 1970 ஆம் ஆண்டு தெல் லிப்பளையில் இந்த வைத்தியசாலைக்கான நிரந்தர கட்டடம் அமைக் கப்பட்டு, அங்கு இயங்கத் தொடங்கியது.

இதில் பத்து விடுதிகளில், நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். அதில் ஒரு விடுதி மனநோயாளர் விடுதியாகும். ஆரம்பத்தில் 15 வைத்தியர்களும், 6 மருத்துவ அதிகாரிகளும் சேவையாற்றி வந்தனர். பின்பு எண்பதுகளின் பிற்பகுதியில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கு, அதற்கான கட்டடமும் அமைக்கப்பட்டு, சிகிச்சை அளிப்பதற்கான "கோபால்ற் கதிரியக்கக் கருவி"யும், 40 மில்லியன் ரூபா செலவில் பொருத் தப்பட்டது. எனினும், இதன்மூலம் எவரும் சிகிச்சை பெறமுடியாது போனதுடன், 1990 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போரின்போது, இந்தக் கதிரியக்கக் கருவியின் முக்கிய தொழிற்பாட்டுப் பாகங்கள் களவு போனமை குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், தெல்லிப்பளையை நோக்கி இராணு வத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து, மானிப்பாய் கிறீன் மருத்துவமனையுடன் சேர்ந்து இந்த வைத்தியசாலை இயங்கத் தொடங்கியது. அங்கு ஐந்து ஆண்டுகள் இயங்கிவந்தவேளை, மீண்டும் 1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி வலிகாமம் இடம்பெயர்வையடுத்து, மானிப்பாயி லிருந்து சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையுடன் இணைந்து இயங்கியது.

சிறிதுகாலம் அங்கு இயங்கியபின் மீண்டும் 1996.05.05 மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக்க வந்து இயங்கிக்கொண்டிருந்தது. 1998 ஆம் ஆண்டு தெல்லிப்பளையின் ஒரு பகுதியில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்த தையடுத்து, அங்கு முன்பு இயங்கிய கூட்டுறவு வைத்தியசாலைக்கட்டடத்தில், இந்த வைத்தியசாலையை இயங்கவைக்க முடிவெடுக்கப்பட்டது, அதே ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இன்றுவரை அக்கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தற்போது ஆறு நோயாளர் விடுதிகளில் - நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். இதில் 6 ஆம் இலக்க விடுதி மனநோயாளர் விடுதியாகும். இந்த விடுதியில் பத்துப் பெண்களும், பதினாறு ஆண்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கொடிய போரினாலும், வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியினாலும் நூற்றுக்கணக்கான மனநோயாளர்களிற்கு, இந்த வைத்தியசாலைமூலம் சிகிச்சையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த வைத்தியசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கினாலே, அதற்கான கட்டட உதவிகளையோ, ஏனைய வசதிகளையோ செய்ய முடியும் எனச் சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்ததையடுத்து, வசதியீனங்களுடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. எனினும், புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவும், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இவ்வருடத்திலிருந்து இயங்குகின்றன.

எனினும், இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமராத நிலையில் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் உயர் பாதுகாப்பு வலயத்தில், இந்த வைத்தியசாலைக்கு அதாவது, தற்போது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் மாதாந்த கிளினிக்குக்கு நோயாளர்கள் சென்றுவரச் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களும் குறிப்பிட்ட நேரத்தில் தான் சென்றுவர முடியுமெனப் படையினர் நிபந்தனை விதித்துள்ளனர். இந்நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைப்பதன்மூலம் வைத்தியசாலைக்கு அயலில் மக்கள் மீளக்குடியமர வழிவகுப்பதுடன், வைத்தியசாலைப் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

அத்துடன், யாழ்ப்பாண மக்கள் மட்டுமன்றி, வட-கிழக்கு மாகாணத்திலே தமிழர் பகுதியிலுள்ள ஒரேயொரு புற்றுநோய் வைத்தியசாலை- புதுப்பொலிவுடன் இயங்குமாயின், ஈழத்தமிழருக்கு கிடைத்த ஒரு வரப் பிரசாதமாகும். எது எவ்வாறெனினும் புனரமைப்பு, திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறுவதுடன், தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையை மீளச் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவார்களா? அல்லது மௌனமாக தொடர்ந்தும் இருக்கப்போகிறார்களா?

— கணாதரன்

# உழவு இயந்திர இலக்கத்தை மாற்றியவர்கள் பிடிபட்டனர்!

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் இலக்கத்தை மாற்றிக்கொண்டிருந்த இருவர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக விறகுகளை வெட்டிய குற்றச்சாட்டின் பேரில், நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் இலக்கத்தினை மாற்றி, புதிய இலக்கம் ஒன்றினைப் பதிக்கும் முயற்சியில இருவர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

உழவு இயந்திரத்தில் இலக்கங்களை எழுதிக் கொண்டிருந்தவேளை, இருவரும் பிடிக்கப்பட்டனர். இவர்களிடமிருந்து பெயினற் மற்றும் பிறஸ் ஆகியன மீட்கப்பட்டன.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த இராசையா கனகசுந்தரம், நமசிவாயம் மகாதேவன் ஆகிய இருவருமே உழவு இயந்திரத்தின் இலகத்தை மாற்றும்போது பிடிக்கப்பட்டனர்.

இருவரும் நீதிவானின் பணிப்பின் பேரில் நெல்லியடிப் பொலிஸ் நிலை யக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, இருவரையும் அடுத்தமாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

## மரத்திலிருந்து வீழ்ந்து படுகாயம்

தென்னைமரத்திலிருந்து சறுக்கி வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர்- படுகாயமுற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விசுவமடுவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான த.மனோகரன் (வயது 36) என்பவரே, படுகாயமடைந்து, தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

### ஈராக்கில் தூதரகம் மீதான தாக்குதல்:

# ஐ.நா.வின் 58 ஆண்டு வரலாற்றில் மிகவும் மோசமான சம்பவமாகும்!

## பாதுகாப்பு குறைபாடே காரணம் என்கிறார் அனான்


ஈராக்கில் கொல்லப்பட்ட அதிகாரியுடன் கோபி அனான்.


இடிந்து கிடக்கும் பக்தாத்திலுள்ள ஐ.நா. தூதகரகம்

ஈராக்கில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயம் மீது, நேற்றுமுன்தினம் குண்டுகள் நிரப்பிய வாகனம் ஒன்றின்மூலம் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் குண்டுதாக்குதலில், பிரேஸிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி 'சேர்க்கியோ விரா டீ மெல்' இடிபாடுகளுள் சிக்கி மரணமடைந்ததார்.

மேலும் 17 பேர் வரை கொல்லப்பட்டதாகவும், 160 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் வெளியிட்டுள்ள அறிக்கையில் - ஐக்கிய நாடுகள் சபையின் பணி, ஈராக்கில் தொடரும் எனவும், ஐக்கிய நாடுகள் சபை யின் பணியாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்குவதற்கு அமெரிக்கப் படையினர் தவறிவிட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 58 ஆண்டுகால சரித்திரத்தில் அந்த அமைப்பின் பணியாளர்களுக்கெதிராக நடைபெற்ற மிகமோசமான தாக்குதல் இதுவென ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் குண்டுதாரியின் அவயவங்கள் சிதறிக் கிடந்ததைத் தாம் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

### ஈராக்கின் திக்ரிட் நகரில்

## சதாம் ஆதரவாளர்கள் தாக்குதல்; அமெரிக்கர்கள் இருவர் காயம்!

### ஒப்பந்தகாரர் ஒருவரும் கொல்லப்பட்டார்

சதாமின் பிறந்த இடமாகிய திக்ரிட் நகரில், இராணுவ வாகனத் தொடரணி ஒன்றின்மீது, சதாமின் ஆதரவாளர்கள் மறைந்திருந்து தாக்கியதில், கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர் என்று ஈராக்கில் பணியாற்றும் அமெரிக்க இராணுவ அதிகாரியான மேஜர் பிறையன் லுக் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒப்பந்தகாரர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை தன்னால் கூறமுடியவில்லை எனவும் -

ஈராக்கில் போர் மூண்டதன் பின்னர் சதாமின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் இதுவரை 61 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

### சிறைத்தண்டனை விதிப்பு!

அவுஸ்திரேலியாவின் 'ஒரு நாடு' என்ற கட்சியின் தலைவியும், வெளிநாட்டவர்கள் குடியேறுவதை எதிர்ப்பவருமான "போலின் கான்சென்" என்பவருக்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் மூன்றாண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது. தனது தொகுதியின தேவைகளுக்காக, அரசிடமிருந்து தவறான முறையில் பணம் பெற்றதற்காகவும், தனது கட்சியை 1997 ஆம் ஆண்டு சட்டவிரோதமாகப் பதிவு செய்ததற்காகவும், இந்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஆசிய நாட்டவர்கள் குடியேறுவது தொடர்பாக, கடும்போக்கான கருத்துக்களை இவர் வெளியிட்டதால், உலகின் கவனத்தை தன்பால் கவர்ந்திருந்தார்.

### 19 இஸ்ரேலியர் பலியானதையடுத்து

# பலஸ்தீனத்துடனான பேச்சை இஸ்ரேல் இடைநிறுத்தியது!


ஜெருசலேம் நகரின் மத்திய பகுதியில், நேற்றுமுன்தினம் பஸ் ஒன்றின் மீது பலஸ்தீனிய தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 19 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களைக் காரணங்காட்டி, பலஸ்தீனர்களிடம் மேற்குக்கரை நகரங்களைக் கையளிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை உடன்நிறுத்தியுள்ளதாக, இஸ்ரேலின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

பலஸ்தீனர்கள், மேற்குக்கரை நகரங்களுக்குள் செல்வதையும் அங்கிருந்து வெளியேறுவதையும் முற்றாகத் தடைசெய்வதற்கு இஸ்ரேல் தீர்மானித்துள்ளதாகவும், அந்நாட்டு அமைச்சரவையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன், அடுத்து எடுக்கவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் -

பலஸ்தீன பிரதமர் முகமட் அபாஸ் இஸ்லாமிய தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலை கண்டித்துள்ளளார்.

இதேவேளை, இஸ்லாமியத் தீவிரவாதிகளுடனான தொடர்புகளை பலஸ்தீனிய அரசு நிறுத்தியுள்ளதாகவும் - பலஸ்தீன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உலகவலம்

## இஸ்லாமிய தீவிரவாதிகளால் பணயக் கைதிகள் விடுவிப்பு!

(அல்ஜீரியா)

கடந்த மார்ச் மாதம் 32 ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகள் அல்ஜீரியாவின் பாலைவனத்துக்கூடாகச் சுற்றுலா சென்றுகொண்டிருந்த வேளையில், இஸ்லாமியத் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் - 5 மாதங்களின் பின் விடுவிக்கப்பட்டு, மாலியின் தலைநகர் பமாகோவிலிருந்து புதன்கிழமை ஜேர்மனிக்கு வந்து சேர்ந்துள்ளார்கள். இப்பணயக் கைதிகளில் - ஜேர்மன், சுவிஸ், ஒல்லாந்து ஆகிய நாடுகளின் பிரஜைகள் அடங்குவர். இவர்கள் பாலைவனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து தரைப்பாதையூடாக 55 கிலோமீற்றர் பிரயாணத்தின் பின்னர், மாலியின் தலைநகரில் உள்ள விமானநிலையத்தை அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்திப் படங்கள்


இடம்பெயர்ந்து, லைபீரியத் தலைநகர் மொன்றோவியாவில் முகாம் ஒன்றில் தங்கியிருக்கும் மக்கள், இரவு உணவுக்காக காத்திருக்கும் காட்சி.



தென்கொரிய நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்ட தென்கொரியர் ஒருவரை அந்த நாட்டின் கலக மடக்கும் பொலீஸார் கைதுசெய்து வெளியேற்றும் காட்சி.


பக்தாத்தின் புறநகர்ப் பகுதியில் வைத்துக் கொலைசெய்யப்பட்ட 'ரொய்ட்டர்' படப்பிடிப்பாளர் மேஸன் டானாவின் இறுதிச்சடங்கு, அவரது நகரான மேற்குக்கரையின் ஹேறாபன் என்ற இடத்தில் நடைபெற்றபோது உறவினர்கள் கதறியழும் காட்சி.


நேவாடா என்ற இடத்தில் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் தனது மோட்டார் வாகனத்தை ஒருவர் உருட்டிச் செல்லும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர் பண்பாட்டை அழிக்க முனையும் சக்திகளுக்கு இடமளிக்க வேண்டாம்!

## விழிப்பாக இருக்கக் கோருகிறது திரைப்பட வெளியீட்டுப் பிரிவு

பெருமைக்குரியதும் தனித்துவம் மிக்கதுமான தமிழ்மக்களின் பண்பாட்டு விழுமியங்களை அடியோடு சாய்க்க நினைக்கும் சக்திகளுக்கு இடமளியாது, விழிப்பாக இருந்து எமது இனத்தின் தனித்துவத்தை பேணிப்பாதுகாக்க வேண்டுமென, தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

எமது திருநாட்டின் எதிர்காலச் சிற்பிகளான இளைஞர்களையும், யுவதிகளையும் ஆபாச உணர்ச்சிகளுக்கும் மற்றும் அழிவு சக்திகளுக்கும் அடிமையாகிப் போகாது காப்பாற்றும் இந்த நோக்கத்திற்கு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென, திரைப்பட வெளியீட்டுப் பரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சந்தர்ப்ப சூழ்நிலைகாரணமாகவும், போராட்ட எதிர்ப்பு சக்திகளின் கட்டாயத்தின் பேரிலும் - தனிமனித வாழ்வைப் பாதிக்கக்கூடியதான வகையில், போதைப் பொருட்களை ஊக்குவிக்கும், பெண்களை இழிவுபடுத்தும் வகையல், கீழ்த்தரமான காட்சிகளை உள்ளடக்கியதுமான திரைபபடங்களைத் திட்டமிட்டு வழங்கிவருபவர்களை நாம் இனங்கண்டுள்ளோம்.

எமது இனத்தின் பண்பாட்டை மீறும் செயலாக மட்டுமன்றி, மனித பண்பாட்டிற்கு ஒவ்வாத அநாகரிகமான செயற்பாடாகவே இதைக் கருதுகின்றோம். எனவே, இப்படியான திரைப் படங்களைத்திரையிடுவது தமிழர் தாயகப் பகுதிகளில் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை பல்வேறு தடவைகள் நாம் அறிவுறுத்தியும் வந்துள்ளோம்.

எனவே, பெருமைக்குரிய தமிழ் பேசும் மக்களாகிய நாம், எமது பண்பாட்டுவேரை அடியோடு சாய்க்க நினைக்கும் சக்திகளுக்கு இடமளியாது விழிப்பாக இருந்து, எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணி பாதுகாக்கவேண்டுமென, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடன் சென்றுகொண்டிருந்த

# விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகளை தடுத்து நிறுத்திய அதிரடிப்படையினர்!

## மட்டக்களப்பு - கஞ்சிகுடிச்சாறில் சம்பவம்

வீரமுனையிலிருந்து அக்கரைப் பற்று வழியாக கஞ்சிகுடிச்சாறு நோக்கி விடுதலைப் புலிகளுடன் சென்றுகொண்டிருந்த விளையாட்டுக் கழக பிரதிநிதிகளை, பயணத்தைத் தொடரவிடாது - அதிரடிப்படையினர் தடுத்துநிறுத்தினர்.

மேற்படி சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. விளையாட்டு கழக பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்திவிட்டு, அவர்களை கஞ்சிகுடிச்சாறு பகுதிக்கு கொண்டு செல்லும்போது, அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினர் அவர்ளைத் தடுத்துநிறுத்தினர்.

இதன் பின் அக்கரைப்பற்று பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம்.ஐ.எம் புகாரி தலையிட்டு, விளையாட்டு பிரதிநிதிகளிடம் சென்று நீங்கள் விருப்பத்துடனா புலிகளுடன் செல்கிறீர்கள் எனக் கேட்டார். அதற்கு அவர்கள் விருப்பத்துடன் செல்கின்றோம் எனக் கூறவே இருபது நிமிடத்தின் பின் பயணத்தை தொடர அனுமதித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு துணை அரசியற் பொறுப்பாளர் குயிலின்பன் - விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கிறார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என தெரிவித்துள்ளார்.

# நிகொட் நிறுவனத்தின் வாகனம் திருகோணமலையில் கடத்தல்!

நிகொட் உதவி நிறுவனத்தின் பிக்கப் வாகனமொன்று திருகோணமலையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

இவ்வாகனம் - நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திலிருந்து ஆயிரம் மீற்றர் தொலைவில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகளில் வந்த மூவர் ஆயுதங்களைக் காட்டி வாகனத்தை கந்தளாய்க்கு கொண்டுசென்று, அங்கு சாரதியை இறக்கவிட்டு வாகனத்தைக் கொண்டு சென்றுள்ளனர் என சாரதி பொலிஸில் முறையிட்டுள்ளார். ஆயுததாரிகள் கொண்டுவந்த முச்சக்கர வண்டி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## இருவர்த்தகரைக் காணவில்லை!

வியாபார நோக்கமாக சாய்ந்த மருதுக்குச் சென்ற - வாழைச் சேனை வாசிகளான இரு முஸ்லிம் வியாபாரிகள் வீடு திரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

பதினாறாம் பிரிவு சாய்ந்தமருதைச் சேர்ந்த இப்ராஹிம் இல்யாஸ், அதேயிடத்தைச் சேர்ந்த மர்சூக் ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளனர்.

இவர்களிடம் எழுபத்தையாயிரம் ரூபா பணமும், புதிய ரக மோட்டார் சைக்கிள் ஒன்றும் இருந்துள்ளது.

இவர்கள் சென்ற இடத்திற்குச் சென்று பார்த்த உறவினர்கள் அங்கும் அவ்விருவரும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். (07)

## நெல் அறுவடைக்காக வரும்

# தமிழர்களுக்கான பாதுகாப்புக்களை அழைத்துவருபவரே வழங்கவேண்டும்

முஸ்லிம்கள் நெல் அறுவடைக்காக, வெளியிடங்களிலிருந்து சம்மாந்துறைப் பிரதேசத்திற்குள் அழைத்து வரும் தமிழர்களுக்கான பாதுகாப்பை, அவர்களை அழைத்துவருபவரே வழங்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று - நேற்றுமாலை சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர் ஏ.எல்.எம்.நசீர் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் சம்மாந்துறை நம்பிக்கை சபை, பள்ளிவாசல்களின் நமபிக்கை சபை, வீரமுனை கோயில் தர்மகர்த்தா சபை, விவசாயிகள், ஊர்ப பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடங்களில் இருந்து அழைத்து வரப்படுபவர்களின் பெயர் விபரங்களை சம்மாந்துறை பள்ளிவாசலுக்கு கொடுக்கவேண்டும் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துறைநீலாவணையில் புதிய முகாம்; அமைக்கும் முஸ்தீபில் அதிரடிப்படை!

## பொதுமக்கள் அச்சத்துடன் முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையினர் புதிய முகாம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு துறைநீலாவணைக் கிராமத்திற்குள் திடீரெனப் பெருமளவு அதிரடிப்படையினர் பிரவேசித்து, முகாம் அமைப்பதற்காக இடத்தைப் பார்வையிட்டனர். இதற்காக, பெருமளவிலான அதிரடிப் படையினர் அப்பகுதிக்குள் சென்ற வேளை - பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

இப்பகுதியில் படையினர் முகாம் அமைக்க உள்ளனர் என்ற தகவல் பரவியதையடுத்து, மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது. விசேட அதிரடிப்படையின் பிரதிக் கட்டளையிடும் அதிகாரி எச்.லியூகியும், சுமார் நூற்றைம்பது படையினரும் - இந்தப் பகுதியினரைச் சுற்றிப் பார்த்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்திடம் - மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து, அவர் விசேட அதிரடிப்படைப் பிரதிக் கட்டளையிடும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு மக்கள் மத்தியிலுள்ள பதற்ற நிலையை விளக்கினார்.

அதற்கு அங்கு முகாம் அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லையெனவும், பாதுகாப்பை பலப்படுத்தவே தாம் அங்கு சென்றதாகவும், பிரதிக் கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

# ஜனகபண்டார தென்னக்கோனுக்கு 26 ஆம் திகதிவரை விளக்கமறியல்

பொதுஜன ஐக்கிய முன்னணியின நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோனை எதிர்வரும் இருபத்தாறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு - கொழும்பு கோட்டை நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தம்புள்ள நீதிவான், நீதிமன்றம் விடுத்த வேண்டுகோளை ஆராய்ந்த பின்னர், இந்த உத்தரவை கோட்டை நீதிவான் சரத் சி.கருணாரத்ன பிறப்பித்துள்ளார்.

தம்புள்ள நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடிவிறாந்திற்கமைய தேடப்பட்டு வந்த இவர், கொழும்பில் தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வருவதாக, நேற்றுமுன்தினம் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து மருத்துவனைக்கு சென்று, நிலைமைகளை நேரடியாக பார்வையிட்ட கோட்டை நீதிமன்ற நீதிவான், மேற்படி உத்தரவினை பிறப்பித்தார். இதனையடுத்து தனியார் மருத்துவனையில் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின்கீழ் - சிகிச்சை பெற்று வரும் இவருக்கு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை அளிப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

ஆயுதங்களுடன் தம்புள்ளைப் பகுதியில், வீடொன்றுக்குள் புகுந்து சிலரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாகபாகவே இவர் தம்புள்ள நீதிமன்றத்தினால் தேடப்பட்டு வந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும், நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மண் அகழ்ந்தோர் பிடிபட்டனர்

கடந்த சில தினங்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி நள்ளிரவு வேளைகளில் அரியாலைப் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மண்ணகழ்வில் ஈடுபட்ட கட்டட ஒப்பந்தகாரர் மற்றும் வாகன உரிமையாளர்கள் பலர் - கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குழுவினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

மழையைப் பயன்படுத்தி மண்ணை ஏற்ற முயன்றோரை சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குழுவினர் கடும் எச்சரிக்கை செய்ததுடன், தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என எச்சரித்து விடுவித்தனர்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு!

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நேற்று நண்பகல் நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமரைச் சந்தித்து, கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தில், பொலிஸ பிரிவுகளுக்கு ஆட்களைச் சேர்ப்பது பாதுகாப்பான நடவடிக்கை அல்ல. புதிய பொலிஸாரை இணைக்கும் செயல் இனமோதல்களையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு சுட்டிகாட்டினர்.

கிழக்கில் அவசரமாக படைக்கு ஆட்களைச் சேர்ப்பது தொடர்பாக வெளியான செய்தி குறித்தே அவர்கள் தமது கலந்துரையாடலில் எடுத்துரைத்துள்ளனர்.

கிழக்கில் நடைபெறும் சம்பவங்களைச் சரியாக விசாரித்தறியாமல் - பொலிஸாரின் விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னர், சில அரசியல்வாதிகள் - விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

நேற்றைய சந்திப்பில், வீ.ஆனந்தசங்கரி, ஆர்.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ் மக்களுக்கு உதவிகளைச் செய்ய...

படையினரின் புதிய முகாம்கள் தொடர்பாகவும், சாவகச்சேரி பிரதேசத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் - யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பததினியம்மா திலகநாயகம்போல், திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை ஆகியோர் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். அரச அதிகாரிகளுடனான சந்திப்பைத் தொடர்ந்து, யாழ்.பொது நூலகத்தில் நடைபெறும் புனரமைப்புப் பணிகளையும் பிரதித்தூதுவர் பார்வையிட்டார்.

## கொழும்பு...

சிறைச்சாலை அதிகாரி என்று,

தென்பிராந்திய பொலிஸ்மா அதிபர் டபிள்யு பிரதாபசிங்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள - தங்காலை, அம்பலாந்தோட்டை, அங்குனுகொல பெலஸ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விசேட பொலிஸ் குழுக்கள் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டன.

## முகமாலையில் போராளி...

ளர் இமயன் பஸ்ஸில் அழைத்துச் சென்றார்.

சில தீயசக்திகளின் வழிகாட்டலுக்கு எடுபட்ட உண்மைநிலையை அறியாத ஆறுமுகம் கிருபாகரனின் வளர்ப்புத் தாயார், முகமாலை சோதனைச்சாவடிக்கு சென்று கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் படைத்தரப்பினாலும், பொலிஸாரினாலும் திட்டமிட்டு அச்சுறுத்தி வாக்குமூலம் பெறப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

மோட்டார்சைக்கிளில் போராளி புகழ்மாறன் தனியாக சென்றபோது அவரையும் இந்த சம்பவத்துடன் தொடர்புபடுத்தி கைதுசெய்தனர். இந்தச் சம்பவம் ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்தமீறல் ஆகும். இந்த விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கு நேற்றுமுறையிட்டுள்ளோம்.

நாங்கள் ஆட்கடத்தலிலோ ஆயுதக் கடத்தலிலோ ஈடுபடவில்லை. இந்தவிடயம் வேண்டுமென்றே ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக புனையப்பட்ட சம்பவம்.சாதாரண ஒருவர், 24 வயதை அண்மித்த இருவரை எவ்வாறு கடத்திச்செல்லமுடியும்? இது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல் என அவர் குற்றம் சாட்டினார்.

பொறுப்பற்ற இந்த சம்பவம் தொடர்பாக, மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுசெய்து வருகின்றோம் எனவும் இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கை தனியாக...

நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்கள் உட்பட மனிதஉரிமை மீறல்கள், உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொணடுவரும் முயற்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இவ்வாறான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

கண்காணிப்புக்குழு மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை வீழ்ச்சியடைந்து வருவதனாலேயே இக்கருத்தை ஜனாதிபதி தெரிவிக்கக் காரணமாக அமைந்திருக்கின்றது எனவும் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.